March 1930

JL
R673m2ll,M28
N3(4).3.
187693

1629

Registered No. M. 2300.

" SIDDHANTHAM "
Vol. 7—No. 3.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 MAR 1934
MADRAS

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் எ	ஸ்ரீமுக ஆண்டு பங்குனித் திங்கள் 1934 ௵ மார்ச்சுமீ	இதழ் ௩

உள்ளுறை		பக்கம்
சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைமைப்பேருரை	...	௬௫
திருவிசைப்பா	... ...	௭௧
அப்பாது கடவுட் கொள்கை	...	௭௭
பிராசாத அகவல் உரையுடன்	...	௮௧
திருவாசகம் உரையுடன்		௫௩௫-௫௪௮
சித்தாந்த சாத்திரம் உரையுடன்	...	௫௫-௬௮

ஆசிரியர்:—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர்:—அ. கந்தசாமிப் பிள்ளை.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1934 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞானசித்தியார் வெளியீடு

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகிய சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும் உரையும், திருத்துறையூரில் அருணந்தி சிவாசாரியார் சந்நிதியில், நிகழும் ஸ்ரீமுகவருஷ பங்குனிமீ ௩உ வெள்ளிக்கிழமை (16-3 34) மாலை 6 மணிக்குச் சந்தான ஆசிரியர் பாதகாணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும். பிறகு, ஆங்கு ஒரு பொதுக்கூட்டம் கூடும். அதில் பல பேரறிஞர்கள் சைவப் பிரசங்கம் செய்வார்கள். அன்பர்கள் எல்லோரும் வந்து இன்புற வேண்டுகிறேன். 20-3-34-க்குப் பிறகு புத்தகம் வெளியூர்கட்குத் தபாலில் அனுப்பப்படும். தனிப்பிரதி விலை அணா 12. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 5.

இங்ஙனம் :

ம. பாலசுப்பிரமணியன்,

காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை.

சமாஜச் சார்பில் புராணப் பிரசங்கங்கள்

புராணப் பிரசங்க முறையை மேற்கொண்டு அதிலுள்ள குறைபாடுகளைக் களைந்து சீரிய வழியில் சமயப் பிரசாரம் செய்தல் இக்கால நிலைமைக்கு இன்றியமையாதது என்ற நோக்கத்தோடு, நமது சமாஜத்தினர் பல புராணப் பிரசங்கங்களை நடாத்தி வருகின்றனர். வீரசைவப் பேரறிஞரும், சித்தாந்த சிகாமணி வசவ புராணம் முதலிய பல நூல்களை உரை யெழுதி வெளியிட்டவரும், குருபசவா கம்பெனியின் உரிமையாளரும், பெருஞ்செல்வருமாகிய **திருவாளர் - செ. நாகி செட்டியாரவர்கள்** இம்முறையைப் பின்பற்றுமாறு சமாஜத்தை ஊக்கித் திருமயிலாப்பூரிலுள்ள தமது மாளிகையில் (134, பிராடீஸ் ரோட்) இப்பிரசங்கங்கள் நிறைவேற எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து உபகரிப்பது பெரிதும் போற்றத்தக்கது. இம்முறையைப் பின்பற்றி முதலாவது பிரசங்கம், 17-2-34-ல் அரசாங்க மகமதியர் கல்லூரித் தமிழாசிரியர் அ. கந்தசாமிப் பிள்ளையவர்களால் நடைபெற்றது. புராணபடனத்தின் அவசியமும் பயனும், 'திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்' என்ற பாட்டின் பொருளும் விளக்கப்பட்டன. இரண்டாவது பிரசங்கம் 26-2-34-ல் நடைபெற்றது. மேற்கூறிய திரு - கந்தசாமிப் பிள்ளையவர்களே விநாயக புராணத்தில் வல்லாளன் பூசித்து முத்தி யெய்திய சருக்கத்தை எடுத்துப் பிரசங்கித்தார்கள். மூன்றாவது பிரசங்கம் 4-3-34-ல் நடைபெற்றது. திரு-ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள், சீகாளத்தி புராணத்தில் நக்கீரர் சருக்கத்தை எடுத்துப் பிரசங்கித்தார்கள். இப்பிரசங்கங்களில் பல தத்துவ நுட்பங்களும் புராணங்களின் உட்கருத்துக்களும் தெளிவாக விளக்கப்படுகின்றன. கிளைக்கதைகள், பொழுதுபோக்குக் கதைகள், விகடங்கள் முதலியன சிறிதுமின்றி

Registered No. M. 2330.

10 MAR 1934

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு"

மலர் ௭	ஸ்ரீமுக ஆண்டு பங்குனித் திங்கள் 1934 ௵ மார்ச்சு௴	இதழ் ௰

சைவ சித்தாந்த மகாசமாஜ

28-ஆம் ஆண்டு நிறைவு விழா

சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைமைப் பேருரை

[திருவளர்செல்வி. மாணிக்கவாசக சரோஜனியம்மையார்]

(இதழ் ௭ - மலர் ௨ - ௬௪-ம் பக்கத் தொடர்ச்சி)

காரைக்காலில் வணிகர் குலத்தில் தோன்றிய புனிதவதியார் இளமைப்பருவந்தொட்டே பல அறிவு நூல்களைக் கற்றுச் சிவபிரானிடத்தும் அவர்தம் அடியாரிடத்தும் மெய்யன்பு கொண்டவராய்ப் பசித்துவரும் அடியார்களுக்குத் திருவமுது உதவியும், உறுப்பறைகளையும், ஏழைகளையும் கண்டால் மனமிரங்கி அவரவர்க்கேற்றவண்ணம் உதவிசெய்தும் தம் காலத்தைப் பயன்படுத்தி வந்தார். மங்கைப்பருவ

மடைந்தபின் பெற்றாரும், உற்றாரும் செல்வக்குலத்து வந்த பரமதத்தன் என்பானைக் கணவனாகத் தெரிந்தெடுத்துச் சிறப்புடன் மணமுடித்துத் தம் அருந்தவப் புதல்வியைப் பிரிய மனமில்லாமல், தமதிருப்பிடத்திற் கருகாமையிலேயே சிறந்த ஒரு மாளிகை அமைப்பித்து, வேண்டிய சீர் செல்வங்களைக் கொடுத்து, அவர்கள் இருவரும் அதில் வாழும்படி ஏற்பாடு செய்தார்கள். பரமதத்தன் பொருளீட்டுவதில் முயற்சியுடையவனாயிருந்தான். அம்மையார், தம் கணவர்க்கேற்றபடி நடந்து, என்றும்போல் சிவபிரானிடத்தும், அவர்தம் அடியாரிடத்தும் அன்புகுன்றாதவரா யிருந்தார். இல்லறத்தை இனிது நடாத்தி வரும் நாளில் பரமதத்தனைக் காணவந்த ஒருவர், இரண்டு மாங்கனிகளைக் கொண்டுவந்து கொடுக்க, அவர் அதனை வீட்டிற் கனுப்பிவைத்தார். அச்சமயம் சிவனடியார் ஒருவர் விருந்தினராக வர, வீட்டில் திருவமுது மட்டும் இருந்தும், உடன்கொட்டி உண்ணக் கறியமுது இல்லாததால், அம்மையார் கணவர் அனுப்பிய மாங்கனிகளி லொன்றை அவருக்கு அளித்துவிட்டார். கணவர் வந்து உண்ணும்போது தமக்கு வைத்த பழத்தினை உண்டு சுவையாயிருந்தமையால் மற்றொரு பழத்தையும் கொண்டு வரும்படி சொல்ல, அம்மையார் இறைவனை வேண்ட, அவனருளால் ஒரு கனி அவர்தம் கையில் வந்தது. அதைக் கணவனுக்கு அளிக்க, அதனை உண்ட அவன் அப்பழமும் முன் உண்ட பழத்தினைக்காட்டிலும் சுவையில் மேம்பட்டிருப்பதை உணர்ந்து காரணம் வினவலும் புனிதவதியார் உள்ளது உள்ளவாறு தெரிவிக்க, அவன் அதை நம்பாமல், மற்றொரு பழம் தெய்வத்தை வேண்டிப் பெறுமாறு சொல்ல, அவர் மனமிரங்கிப் பிறிதொரு கனி அருளுமாறு கடவுளை மிகவணங்கி வேண்டலும், கடவுளருளால் கனி வரப்பெற்றார். அதை அவ்வம்மை கணவன் கையிற் கொடுக்க அப்போது அக்கனி மறைந்து விட்டது. இந்தப் புதுமையைக் கண்டபோது பரமதத்தன் தன் மனைவி, மக்களிற் சேர்ந்தவளல்லள் என்றும் ஒரு தெய்வமே என்றும் அறிந்து அன்று முதல் மனைவியுடன் நெருக்கமாக இராமல் சின்னாட்களிருந்து, பிறகு வாணிகத்தின் பொருட்டு வெளியூர் செல்வதாகக் கூறி

வேற்றூர் சென்று வேறொரு பெண்ணை மணமுடித்துக் கொண்டு ஒரு பெண் குழவியை ஈன்று மகிழ்வுடன் வாழு நாளில், இச்செய்தியை அறிந்த உறவினர் யாவரும் அம்மையாரை அவர்தம் கணவர் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லலும், அவன் மனைவிமக்களுடன் வந்து தன் மனைவியின் தாள்களில் வீழ்ந்து வணங்கினான். இதுகண்ட உறவினர் உளந் திகைத்துக் காரணம் வினவ, அவன் உண்மையை உரைத்துத் 'தெய்வத்தன்மை பொருந்திய மனைவியைத் தன் குலதெய்வமாக வணங்குவதைத் தவிர்த்து மனைவியாகக் கருதலாகாது' என்று தெரிவித்தலும், அம்மையார் மனம் வருந்தாமல் தம் கணவர்க்கே பயன்படக்கூடிய அழகிய தமது உடல் அவர் வெறுத்தபின் வேண்டாமையும், தனித்திருக்க வேண்டியிருப்பதால் தமது அழகிய உருவிற்குத் தீயரால் தீங்கு நேரிடாமையும் கருதித் தம் உருவத்தை மாற்றிப் பேய் வடிவம் அருளுமாறு கடவுளை வேண்டிப் பெற்று உலகத் தொடர்பை ஒழித்துத் தலையால் நடந்து வெள்ளிமலை சென்று மற்றொரு பிறவி எடாமை வேண்டும், எடுக்கநேரின் இறைவனை மறவா திருக்கவேண்டும், எக்காலும் ஐயன் அருகிருந்து அருட்கூத்தைக் காணல் வேண்டும் எனப் பெருமானை வேண்டிப் பெற்று திருவாலங்காட்டிலேயே இருந்து இறைவனை வணங்கிக் காலங் கழித்தார். அவர் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை, கோயில் மூத்த திருப்பதிகங்கள் பாடியருளினார். புனிதவதியாரோ செல்வக் குடியிற் பிறந்து அருமையாய் வளர்க்கப்பட்டவர். அவர்தங் கணவரோ அறிவு மேம்பாட்டிலோ தெய்வ நேயத்திலோ அம்மையின் தகுதிக்கேற்றவரல்லர் என்று தெரிகின்றோம். மனைவிக்கு வேண்டுமே என்கிற நினைவில்லாமல் மற்றைப் பழத்தையும் விரும்பியதிலிருந்தும், மனைவியார் உண்மையை உரைத்தபோதும் அதை நம்பாமையிலிருந்தும் அவர் தம் மனைவியை உள்ளபடி உணர்ந்து காதலிக்கவில்லை யென்பது புலப்படுகின்றது. ஏற்ற கணவனில்லாவிடினும் அவனைப் பராமுகஞ் செய்யாமல் பணிவுடன் நடந்து கடமையில் பிசகாமலிருந்து கணவன் தானே வெறுத்தபோதும் வருந்தாமல் உலக இன்பத்தை முற்றுந் துறந்து தம் முழு மனத்

தையும் கடவுள் பால் செலுத்திவிட்டார். கணவரிடத்து இவர்க்கேற்பட்ட அன்பு கடமையன்பே. கடவுளிடத்து எற்பட்டது உண்மை அன்பு. இவர் நூல்கள் எழுதியது போற்றத்தக்கது.

இனிப் பாண்டிநாட்டின்கண் சைவசமயத்தை வளர்த்த மங்கையர்க்கரசியாரைப்பற்றிச் சிறிது கூறுவேன். மதுரையை ஆண்டுவந்த கூன்பாண்டியன் மனைவியாய மங்கையர்க்கரசியார் பாண்டிநாடு முழுவதும் சமண சமயம் பரவி வருவதையும் தம் கணவரும் அம்மதத்தைத் தழுவி நிற்பதையுங் கண்டு மனமிக வருந்தினாராயினும் தம் கணவரைச் சிறிதும் வெறுமல் தம் கணவரை உயிரினும் மேம்பட்டவராகக் கருதி அவர் தம் நலத்திற்காக அவரது மனம் மாறும் பொருட்டுக் கடவுளை வேண்டிவந்ததுமன்றி, அமைச்சராய குலச்சிறையாரைத் துணையாகக்கொண்டு திருஞானசம்பந்தப் பெருமானைத் தம் நாட்டிற் கழைப்பித்து வைத்து அவருக்குச் சமணர்கள் தீங்கு இயற்றியபோதெல்லாம் மனமிக வருந்தி ஞானசம்பந்தரைக் கொண்டே தமது ஆருயிர்க் கணவனும், குடிகளும் சிவபிரானது உண்மையை உணரும்படி செய்து சைவ சமயத்தைத் துலங்குமாறு செய்தார். இதில் கூன் பாண்டியன் ஓர் அரசனாயிருந்தும் தன் மனைவியைத் தன் விருப்பப்படி நடத்த உரிமையுடையவனாயிருந்தும், நடுவு நிலைமையும் மனைவிமீது மட்டற்ற காதலும் உடையவனாயிருந்ததனால் தனது கொள்கைப்படி நடக்கும்படி மனைவியை வற்புறுத்தாமலும் கொள்கைக்கு மாறுபட்டிருந்தமையால் மனைவிமீது சீற்றங் கொள்ளாமலும் அரசியாரை அன்பாக நடத்திவந்தான். ஆகவே, அரசன் மங்கையர்க்கரசியாருக்கு எல்லா வகையிலும் ஒத்த கணவனே யாவன். அரசியோ ஒரு சோழ அரசனின் புதல்வி யாவள். கல்வி அறிவுடையவள். தங்கணவன் பிறமதத்தில் பற்றுக்கொண்டிருப்பதை உணர்ந்தும் அவன்மீது சீற்றங்கொண்டு பராமுகஞ் செய்யாமலுங் கடமையில் வழுவாமலும் கணவனைத் தன்னுயிர் போற் கருதி வேண்டும் பணிவிடைகளை அன்புடன்செய்து மனம் கோணுதபடி நடந்தும் கற்பின் வல்லமையாற் கடவுள் அருளைப் பெற்று [illegible] தன் கணவனையுஞ் சைவ சமயத்திற்குத்

187093

திருப்பினர். இவ்விருவருக்கும் ஒத்த அறிவும், ஒத்த பண்பும், ஒத்த காதலும் இருந்தமை இதனுல் அறியப்படும்.

திருமுனைப்பாடி நாட்டின் ஒரு பகுதியாய திருவாமூர் என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் தோன்றிய திலகவதியார் என்னும் அம்மையார் இளமைப் பருவந்தொட்டே சிறந்த இயற்கை உடையவராயும், சிவபிரானிடத்துப் பேரன்பு உடையவராகவும் இருந்துவர, பெற்ருேரால் அவருக்குக் கணவராகக் குறிக்கப்பட்ட கலிப்பகையார் போர் மேற் சென்று உயிர் துறக்க, திலகவதியார் அவரை மணவாதிருந்தும் அவரையே கணவராகக் கருதி அவர் மரணத்திற்காக உள்ளம் நொந்து உடன் துறக்க விரும்பினாராயினும், உடன் பிறந்தாரின் வேண்டுகோட் கிரங்கி உலகப்பற்றை ஒழித்துத் துறவறக் கோலம் பூண்டு திருவதிகையில் திருத்தொண்டுசெய்து கொண்டிருக்கையில், தம் சகோதரர் சமண சமயத்தைச் சார்ந்திருப்பதை எண்ணி மிக வருந்தி சிவபிரானை மிகவும் வேண்டி அவனருளால் தம் அருமைத் தம்பியார் மனம் திரும்பிச் சிவபிரானிடத்துப் பேரன்பு கொள்ளும்படிச் செய்தார்.

மணமாகாவிடினும் குறிக்கப்பட்ட கணவர் மரணத்திற்குப் பின் வேறு ஒருவரையும் மணக்காமல் கைம்பெண் போல்வே நடந்துவந்த திலகவதியாரின் கற்பின் திறம் கவனிக்கத்தக்கது. சிவபிரான் அருளை அவர் பூரணமாய்ப் பெற்றிருந்தாரென்பதை அவர் வேண்டுகோட் கிணங்கி எம்பெருமான் சூலைநோய் கொடுத்து அவர்தம் சோதரர் திருநாவுக்கரசு நாயனாரை உய்யும் நெறி காட்டியதிலிருந்து நன்கு விளங்குகிறது. சகோதரிகளே! இவ்வாறல்லவோ நம் நாட்டுச் சகோதரிகள் தொண்டு செய்தல்வேண்டும்.

சுருங்கச் சொல்லின், உலகில் பாதி பெண்மக்களாயிருத்தலால் நாட்டின் முன்னேற்றத்திற்கும், சமய வளர்ச்சிக்கும் பெண் மக்கள் இன்றியமையாதவர்களாயிருக்கின்ருர்கள். மேனுட்டில் கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்குப் பெண் மக்கள் மிகவும் உழைத்துவருவதே போதிய சான்ருகும். புத்தர் காலத்தில் புத்த மதத்தைப் பரவச் செய்தவர்

களில் பெண்பாலார் மிகுதியாக இருந்தார்களென்று சரித்திர வாயிலாய்த் தெரியவருகின்றது. எனவே, நம் சகோதரிகள் ஒழிந்த நேரங்களில் வீண் பேச்சுப் பேசியும், விகடத்தாள்களையும் கதைகளையும் படித்தும், காலத்தை வீணாகக் கழிக்காமல் சைவ சமயத்தைப் பரவச்செய்வதிலும், நந்தெய்வத் தமிழ் மொழியை வளர்ப்பதிலும் இவ்விரண்டின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருந்துவரும் மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதிலும் தொண்டு செய்வதில் ஈடுபடுதல் வேண்டும்.

பண்டைநாளில் கோயிலுக்கும், சமயத்திற்கும் உள்ள பெருமை இப்போது தீண்டாமை என்னும் கொடிய வழக்கத்தால் குறைந்திருக்கின்றது. நம் அரும் பெருஞ் சைவ சமயாசிரியர்களெல்லாம் சாதிவேற்றுமை பாராட்டவில்லை என்பது அவர்கள் அருளிய பாடல்களில் விளங்குகின்றது. எடுத்துக்காட்டாக "பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கு மடியேன் பரமனையே பாடுவார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே" என்று திருநாவுக்கரசு நாயனாரும் பாடி எல்லா அடியார்களும் அவரவர் குலம் பாராமல் அன்பு பாராட்டி வந்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தாழ்ந்த குலத்தைச் சார்ந்த திருநீலகண்டயாழ்ப்பாணரைத் தாம் போகுமிடமெல்லாம் உடன் அழைத்துச் சென்றதுமன்றி, அவரைப் பல கோவில்களினுள் எல்லாம் அழைத்துச் சென்றார். அந்நாளில் மக்களும் அதை மறுத்தார்களென்பது தெரியவில்லை. கடவுளும் சாதிவேற்றுமை கருதாமல் தம்மிடத்தில் அன்பு கொண்டார்க்கு அருள் அளிப்பர் என்பது நம் நந்தனார்க்குக் காட்சி கொடுத்து ஏற்றுக்கொண்டமையால் விளங்கும். எனவே, சைவ சமயமும், பாடல்பெற்ற கோவில்களும் பண்டைநாட் பெருமையை அடைவதற்கு எம்பெருமான் எழுந்தருளியுள்ள கோவில்களினுள் சாதிவேற்றுமை பாராட்டாமல் எல்லா மக்களையும் விடும்படி ஏற்ற முயற்சியும், தொண்டும்

செய்ய நம் சகோதரிகள் முன்வரல் வேண்டும். நலம். நலம். ஓம் சிவம்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன் றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

திருவிசைப்பா

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

திருவிசைப்பா என்ற சொற்றொடரால் குறிக்கப்படுகின்ற தமிழ்த்திருமுறைகள் திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது சைவப்பெரியாரால் பாடப்பெற்ற பாக்களுள் இப்பொழுதுள்ள 288 பாக்கள். இவ்வொன்பதின்மர் பாக்களும் அவர்களுள் ஒருவராகிய சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு பதின்மூன்று பாக்களும் சேர்ந்த 301 பாக்கள் நம்பியாண்டார் நம்பிகளால் ஒன்பதாவது திருமுறையாகத் தொகுத்து வகுக்கப்பட்டுள்ளன.

திருவிசைப்பா என்ற சொற்றொடர் திரு, இசை, பா என்று மூன்று தமிழ்ச் சொற்களாலாயது. திரு=அருள், இசை=புகழ், பா=பாட்டு. இசைப்பா என்பது இறைவனது புகழைப்பற்றிப் பாடப்பட்ட பா என்று பொருள்படும். அப்பாட்டுகளை ஒன்பது பெரியார்களும் இறைவனது அருளிற் றோய்ந்தும் அவற்றை ஓதுவாரிடத்தில் இறைவனது அருள் விளங்கும்படிக்கும் பாடிய இசைப்பாட்டுகள் ஆதலின், அவை திரு இசைப்பா எனப்பட்டன. இப்பாட்டுக்களினது தொகுப்பு, அத்தொகுப்பினை உடைய நூலுக்கு அன்மொழித்தொகையாக ஆயது. இத்திருவிசைப்பாப்பாட்டு

களில் சில சிறப்புப் பாக்களுக்கு விரிவான உரை எழுத வேண்டுமென்று சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் எனக்கு ஆணை தந்தமையால், அவ்வாணையை மறுக்க அஞ்சித் திருவருளைத் துணைக்கொண்டு யான் உரை எழுதத்தொடங்குகின்றேன். இவ்வுரையை ஓதும் சைவ அன்பர்கள் தாங்கள் காணும்பிழைகளை எனக்கு ஏதுக்களுடன் தெரிவிப்பின் அவர்களுக்கு நான் நன்றிசெலுத்தக் கடப்பாடு உடையவனாவேன். சித்தாந்த உண்மைக்கு மாறான கருத்துப் பிழைகள் இருப்பின், அவை முதன்மையாய்க் கருதப்பட்டுக் களையப்படுதல் வேண்டும் என்பது எனது ஆவல்.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. க

(உரை) தெளி வளர் திரள் பளிங்கின் மணிக்குன்றே - (சுத்த மாயா தத்துவங்களில் ஒளிர்கிற ஒளியாய்) ஆதார ஞான யோகிகளது உள்ளத்தில் தெளிவு அறிவை விளங்கச்செய்து பெருக்குகின்ற உருண்டையான அழகிய பளிங்கு மலையே; ஒளிவளர் விளக்கே - நிராதார ஞான யோகிகளுடைய உள்ளத்தில் விளங்குகின்ற உயிர் அறிவொளியைப் பெருக்குகின்ற பேரொளியே; சூழ் உணர் கடந்தது ஓர் உணர்வே - வேறாகி நின்று சூழ்ந்து அறியும் சுட்டு அறிவுக்கு எட்டாது அதனைத் தாண்டி மெய் அறிவர்கள் (மெய்ஞ்ஞானிகள்) நின்னோடு இரண்டற (அத்துவிதமாய்க்) கலந்து நினது அருளால் அறியும் போறிவே; அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே - மெய் அன்பு மேலும் மேலும் பெருகுகின்ற யோகிகளுடைய உள்ளத்தில் இன்பமாய் உணரப்படுகின்ற தேன் கசிந்து வரும் பக்குவமுடைய பழமே; சித்தத்துள் தித்திக்கும் தேனே - மெய் அறிவர்களுடைய உள்ளத்துள் பேரின்பமாய் உணரப்படுகின்ற தேனே; உலப்பிலா ஒன்றே - (பிறப்பும்) இறப்புமில்லாத (என்றும் ஒருபடித்தான நிலையில் மெய் அறிவர்கள் உணரும் பேரின்ப உருவமுடைய) ஒப்பற்ற தனிப்பொருளே; அம்பலம் ஆடு அரங்காக - தில்லைப் பொன்னம்பலமே கூத்தாடுகின்ற இடமாக நின்று; வெளி வளர் தெய்வக் கூத்து - (அன்பர்களுடைய உள்ளத்தில்) மெய் அறிவைப் பெருக்கும்படி ஞான நடனத்தை; உகந்தாயை - விரும்பிச் செய்கின்ற உன்னை; தொண்டனேன் - உன்னால் ஆண்டருளப்பட்டு உனக்கு மீளா அடிமைப் பட்டவனாகிய அடியேன்; விளம்புமா(று) விளம்பு - உனது நிலையான பண்பைப்பற்றி உலகிற்குச் சொல்லுகின்ற திறத்தை நீ என்னோடு உடனாய் எனது நாவில் உரையாடியாய் நின்று எனக்குச் சொல்லி அருள்வாயாக.

(விளக்கம்) இந்தப் பாட்டில் இறைவனுடைய ஞானநடனமும் அந்த ஞானநடனத்தால் அருள் அறிவு பெருகி வருகின்ற மெய் அன்பர்களது உள்ளத்தில் உண்டாகும் பயன்களும் சார்ந்தவண்ணம் ஆதற்றன்மையை உடைய அவ்வுயிர்கள் அப்பயன்களை அடைதற்கு வேண்டப்படும் இறைவனது உண்மை (சத்து)த் தன்மையும் அறிவு (சித்து)த் தன்மையும், இன்ப (ஆனந்த)த் தன்மையும் அறப்பட்டன. (1) தெளிவளர்திரள் மலைப்பளிங்கின் குன்றே, (2) ஒளிவளர்விளக்கே (3) சூழ்உணர் கடந்ததொரு உணர்வே என்பவைகளால் இறைவனிலும் உயிரிலும் மாயா உலகிலும் விளங்கும் மூன்று திறப்பட்ட அருள் ஒளியாற் பெறப்படும் உண்மைத் தன்மையும் (1) அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே, (2) சித்தத்துட் டித்திக்குந் தேனே, என்பவைகளால் இறைவனிலும் உயிரிலும் விளங்கும் இருதிறப்பட்ட அருள் ஒளியாற் பெறப்படும் அறிவுத் தன்மையும், உலப்பிலா ஒன்றே என்பதனால் இறைவனில் மாத்திரம் தனியாய் விளங்கும் இன்பத் தன்மையும் கூறப்பட்டன. உண்மைத் தன்மையானது இறைவன், உயிர், உலகம் (பதிபசுபாசம்) ஆகிய முப்பொருள்களுக்கும் பொது ஆதலால் மூன்று திறப்பட்டது. அறிவுத் தன்மை இறைவன், உயிர் இருபொருள்களுக்கும் பொது ஆதலின் இருதிறப்பட்டது. இன்பத்தன்மை இறைவனாகிய ஒரு பொருளுக்கே உரியது ஆதலின் ஒன்றாயது. இறைவனுடைய அருள்ஒளி மாயா தத்துவ உலகத்திலும் உடலிலும்ஆதார ஞானயோகிகளது உயிரிலும் விளங்குதலை திரள் மலைப்பளிங்கின் குன்றே என்றும், மலம் முற்றிலும் நீங்காது ஒருபுடை நீங்கி வருகின்ற ஞானயோக நிலையிலுள்ள உயிரில் விளங்குதலை ஒளிவளர் விளக்கே என்றும், மலம் முற்றிலும் நீங்கி மெய்யுணர்வு பெற்ற உயிரில் விளக்குதலை சூழ்உணர் கடந்ததோர் உணர்வே என்றும் ஆசிரியர் கூறி அருளினார். உலகிலும் உடலிலும் இறைவனது அருள் ஒளி விளங்குதல் உயிர் இன்பப் பயன் அடையும் பொருட்டேயாகும். மாயா தத்துவங்களுக்கு அருள்ஒளியால் யாதொரு பயனுமில்லை. மலம் முற்றிலும் நீங்காத ஞானயோக நிலையிலுள்ள (துரியநிலை) அன்பர் இறைவனுடைய பேரின்ப உணர்ச்சியை அளிவளருள்ளத்து ஆனந்தக்கனியே என்றும்,மலம் முற்றிலும்

நீங்கித் துரியாதீத நிலையின் கண்ணதாகிய மெய் அறிவர், பேரின்பம் உணர்தலை சித்தத்துள் தித்திக்கும் தேனே என்றும் ஆசிரியர் கூறினார். மாயைப்போல காரியப்பாட்டின்கண் நிலையாமையும் காரணப்பாட்டில் நிலைமையும் இன்றி, என்றும் நிலையாயுள்ள உண்மைத் தன்மையும் மலத்தினால் நிறைவு அறிவு (வியாபக அறிவு) தடைப்பட்டிருக்கிற உயிர் மலம் நீங்கிய அளவில் அறிவும் அதுபற்றி அதற்குத் தக்க இன்பமும் மலம் நீங்கின உயிர்நிலையான பேரறிவும் அதுபற்றிப் பேரின்பமும் அடைதல்போல அன்றி எப்பொழுதும் ஒரு நிலையான பேரறிவும் பேரின்பமும் உடைய அறிவுத் தன்மையும் தன்னைச் சார்ந்து பேரின்பமடையும் மலம் முற்றிலும் நீங்கிய உயிர்போல அன்றி ஒரு பொருளையும் சாராது தன்னிலேதானே இன்ப உருவனாயிருக்கும் இன்பத் தன்மையையும் இறைவன் உடையன் என்பதும் இதில் நாம் உய்த்துணரும்படியாக அவர் கூறி அருளினார். மலம் முற்றிலும் நீங்கிய உயிர் பேரறிவு அடைதலும் இறைவனைச் சார்ந்து பொருள்களை ஒன்றொன்றாய்ப் பார்த்து அறியும் அறிவன்றி இறைவனைப்போல் ஒரு பொருளையும் சாராது எல்லாப் பொருள்களையும் ஒரு சேர அறிந்தாங்கறியும் திறனுடையது அன்று என்ற உண்மையையும் நாம் மறக்கலாகாது. தெளிவளர் திரள் பளிங்கின்குன்றே - எந்தப் பொருள் தன்னைச் சார்ந்திருக்குமோ அந்தப் பொருளினது நிறத்தைக் காட்டுதல் பளிங்கின் தன்மைபோல, மண் முதல் நாதம் வரையுள்ள தத்துவங்களில் எந்தத் தத்துவத்தை உயிர் சாருமோ அந்தத் தத்துவத்தின் தன்மையாய் உயிர் விளங்குதலால் பளிங்கு தத்துவங்களுக்கு உவமையாகக் கூறப்பட்டது. தத்துவங்களில் மயக்க அறிவை (அவிச்சையைச்) செய்கின்ற அசுத்தமாயா தத்துவங்கள்போல அன்றி, சுத்தமாயா தத்துவங்கள் தெளிவு அறிவாகத் தம்மிடம் விளங்கும் அருட்பேரொளியை உயிருக்கு விளங்கச் செய்தலால் சுத்தமாயா தத்துவங்களில் விளங்குகிற தெளிவு அறிவு என உரை கூறப்பட்டது. தெளிவு என்பது அசுத்தமாயை, பிரகிருதிமாயைகளுக்கு உரிய மயக்கத்தினின்றுந் தெளிந்த அறிவு உலகத்தை மெய்யென்று நோக்காது சிவத்தை மெய்யென்று நோக்கும் அறிவு இறைவனைப் பளிங்கின்மலைக்கு உவமித்ததனால், ஞாயிற்றினொளி பளிங்கில் விளங்கி அதனைச் சார்ந்த பொருளில் விளங்குதல்போல, மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களையும் குறிகளாக வைத்து யோகம் செய்யும் ஆதார ஞான யோகிகளுடைய உள்ளத்தில் இறைவனுடைய அருட்பேரொளி அவ்வாதாரங்கள் வழியாய் விளங்குகிறது என்பது பெறப்படுகின்றது. இறைவனுடைய அருட்பேரொளியானது, ஆதாரயோகிகளுடைய உள்ளத்தில் ஆறு ஆதாரங்கள் மூலமாய்த் தெளிவு அறிவை அவர்களுடைய யோகப்பயிற்சிக்குத்தக்க அளவிலே பெருக்குதலால்

தெளி வளர் பளிங்குக்குன்றே என்றார். வளர் என்பது பெருக்கு என்ற பிறவினைப் பொருளில் வந்தது. ஒளிவளர் விளக்கே-விளக்கு = விளக்கும் ஒளிப்பிழம்பு. அஃது இங்கே இறைவனது அருட்பேரொளிப்பிழம்பைக் குறிக்கிறது. அந்த அருட்பேரொளியானது நிராதார ஞானயோகிகளது உயிர் ஒளியை அவர்களது உள்ளத்தில் அவர்கள் யோகப் பயிற்சிக்குத் தக்கவாறு மேலும் மேலும் பெருக்கி மெய் அறிவை விளங்கச் செய்தலால் ஒளிவளர் விளக்கே என்றார். வளர் - பிறவினைப் பொருளில் வந்தது. சூழ் உணர்வு கடந்தது ஓர் உணர்வு- சூழ் - சூழ்தல், ஆராய்தல், கருதல் - முதனிலைத் தொழிற்பெயர். சூழ் உணர்வு கருதி ஆராய்தலாற் பெறப்படும் சுட்டறிவு. இறைவன் இந்தச் சுட்டறிவால் அறியப்படாதவனாய், அதனைக் கடந்து நிற்றலால் கடந்ததோர் உணர்வே என்றார். ஓர் உணர்வு என்பது ஒப்பற்ற பேரறிவு. இறைவனது பேரறிவுக்கு முற்றிலும் மலம் நீங்கிய உயிரினது அறிவும் ஒப்பாதலின்மையால் ஓர் உணர்வே என்றார். இரண்டாவது உணர்வு, மலம் நீங்கும் உயிர்கள் இறைவனோடு அத்துவிதமாய் ஒன்றி நின்று அறியும் பேரறிவைக் குறிக்கிறது. கருதல் அறிவால் பெறப்படும் சுட்டறிவுக்கு எட்டாது அருள் அறிவாற் பெறப்படும் பேரறிவுக்கு எட்டும் பொருளே என்பது பொருள். உயிர்களுடைய பக்குவத்திற்குத் தக்கவாறு இறைவனது அருள்ஒளி மாயா தத்துவங்கள் மூலமாய் உயிரில் விளங்குதலைத் தெளிவளர் பளிங்கின் குன்றே என்றும், மாயையைக் கடந்த உயிரில் நேரே விளங்குதலை ஒளிவளர் விளக்கே என்றும், இறைவனிடம் தனியே விளங்குதலைச் சூழ் உணர்வுகடந்ததோர் உணர்வே என்றும் ஆசிரியர் கூறினார். அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே - அளி என்பது பேரன்பு (Impersonal love). வளர் இங்கே பிறவினைப் பொருளில் வந்தது. ஆனந்தக் கனி என்பது ஆனந்தமாகிய கனி. இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஆனந்தக்கனி என்பது அருள் விளக்கத்தால் ஞான யோகிகளுக்குத் துரிய நிலையின்கண் உண்டாகும் இன்பத் தோற்றத்தை (சுகப்பிரபையை)க் குறிக்கிறது. இது சிவஞான போதம் பத்தாம் சூத்திரத்தில் கூறப்படுகிறது. சித்தத்துள் தித்திக்கும் தேன் - தித்திக்கும் தேன் என்பது நிருவிகற்ப சமாதியில் இருக்கும் ஞானிகளுக்குத் துரியாதீத நிலையின்கண் உண்டாகும் பேரின்ப விளக்கத்தைக் குறிக்கிறது. இது சிவஞானபோதம் பதினொன்றாம் சூத்திரத்தில் கூறப்படுகின்றது. உலப்பிலா ஒன்றே - இறைவனுக்கு இன்ப உருவம் தனியே உரியது. ஆதலின், 'ஒன்றே' என்றார். அதனால் ஒன்று என்ற சொல் இறைவனுடைய பெயராக சைவசமய நூல்களில் கூறப்படுகின்றது. மாணிக்கவாசக அடிகள் **'உலப்பிலா ஆனந்தமாய தேன்'** எனக் கூறியிருத்தலை காண்க. அம்பலம் ஆடு அரங்கு ஆடி - இறைவன் நடனம் ஆடும் இடம் புறத்தில்

சிதம்பரமாகவும் அகத்தில் உயிர்களது உள்ளத் தாமரையாகவும் உள்ளது. உயிர்களது உள்ளத்தில் இறைவன் செய்யும் நடனத்தால் அவைகளுடைய பண்பு விளங்கித் திருத்தம் அடைகிறது. "தில்லை மூதூர் ஆடிய திருவடி - பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி - எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி" என மாணிக்கவாசக அடிகள் கீர்த்தித் திரு அகவலிற் கூறி அருளினமை காண்க. வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தாயை - வெளி என்பது பராசக்தியாகிய அருட்சக்தி விளங்கும் சிற்றம்பலம் (ஞானாகாசம்). அஃது இங்கே அவ்வருளாகிய மெய் அறிவைக் குறிக்கிறது. வளர்தல் - பெருக்குதல். பிறவினைப் பொருளில் வந்தது. தெய்வக் கூத்து - ஞானக் கூத்து. ஞான நடனம், ஊன நடனம்போல் உயிர்களுக்கு மறைத்தலைச் செய்யாமல் மறைப்பை நீக்கி அருள் விளக்குதலால் 'தெய்வக் கூத்து' என்றார். உகந்தாயை - இறைவன் ஐந்தொழில் காரணமாகக் கூத்தினை உயிர்கள்மாட்டு வைத்த பேரருளால் தானே மகிழ்ந்து செய்தலால் கூத்துச் செய்தாயை என்று கூறாது உகந்தாயை என்று கூறினார். விளம்புமா விளம்பே - விளம்புதலாவது ஆசிரியர் தாம் இறைவனோடு இரண்டறக் கலந்து தமது சிவமாம் தன்மையாய தூய உள்ளத்தில் உணரும் சிவபோகப் பேரின்ப உணர்ச்சியால் எழுகின்ற இறைவனுடைய பொருள்சேர் புகழை விரும்பிச் சொல்லுதலாகும். துரியாதீத நிலையில் சிவபோகத்தை உணர்தலுக்கு இறைவன் மலம் நீங்கின உயிர் உடனாய் நின்று உணர்தலும் உணர்ந்ததை உரைத்தலுக்கு அவன் அதன் நாவில் உரையாடியாய் நின்று உரைத்தலும் இன்றியமையாது வேண்டப்படுவன ஆதலின், விளம்புமா விளம்பு என்றார். இவ்வாறு இறைவன் உயிருக்குக் கட்டு நிலையிலன்றி வீட்டு நிலையிலும் செய்துவரும் உதவி, காணும் உதவி என்று கூறப்படும். இதனைக் காரைக்கால் அம்மையார் தமது அற்புதத் திருவந்தாதியில் "அறிவாய் அறிகின்றான் தானே" என்று கூறி அருளினர். விளம்புமாறு என்பது விளம்புமா எனத் தொக்கி நின்றது.

திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் இரண்டாம் பதிப்பு:—பல திருத்தங்களுடன் வெளிவந்துள்ளது - தனிப் பிரதி விலை அணா ஒன்று - தபாற்கூலி 6 பை. இருபது பிரதிகள் விலை ரூ. 1. தபாற்கூலி வேறு.

அப்பரது கடவுட் கொள்கை

[பெ. கோவிந்த மூப்பனார், கொடுமுடி]

(மலர் - ௬, இதழ் - ௧௧, ௨௬௪-ம் பக்கத் தொடர்ச்சி)

"கால்கொடுத் திருகை ஏற்றிக் கழிநிறைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீரால் சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வு டைத்தா அமைத்தங் கேழு சாலேகம் வைத்து
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காடனாரே"

உடம்பையும் உறுப்புக்களையும் கடவுள் உயிர்க்குக் கொடுத்தது, உயிர் தனது மலத்தை நீக்கி வீடுபேறடைதற் பொருட்டாதலின், அக்கொள்கையை மறந்து உலக இன்ப துன்பங்களை நுகர்ந்து காலங் கழிப்பது தவறு என்று அடிகள் கருதுகிறார். உலகவாழ்க்கை, யான் என்னும் அகப்பற்றோடும், எனது என்னும் புறப்பற்றோடும் வாழும் வாழ்க்கை. ஒருவன் தனக்கும் தனது தாய் தந்தை மனைவி மக்கள் முதலியோர்களுக்கும் நோய் முதலியவற்றால் துன்பம் நேருங் காலத்தில் துன்பமுறுகிறான். தனக்குத் துன்பமுள்ள காலத்தில் தனது தாய் தந்தை மனைவி மக்கள் முதலியோர்களுக்கு இன்பம் நேரின் தான் இன்புறுதலில்லை. தனது தாய் தந்தை மனைவி மக்கள் முதலியோர்களுக்குத் துன்பமுள்ள காலத்தில் தனக்கு இன்பம் நேரிடின் அதனைத் தான் மறைத்துக் கொள்ளுகிறான். இவ்வாறாக ஒருவன் பெருவரவிற்றாகிய துன்பத்தையும் சிறுவரவிற்றாகிய இன்பத்தையுமே தன் வாழ்க்கையில் அடைகிறான்.

"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு"

என்று திருவள்ளுவர் கூறுவதையும் நோக்குக.

வாழ்க்கையில் அகப்பற்றோடும் புறப்பற்றோடும் செய்யும் செயல்கள் தன்னலம் கருதிச் செய்யப்படுவனவாதலின், தன்னலத்திற்காக நடுவு நிலைமையின்றி மிகுதியும் அறமல்லாதனவே செய்யப்படுகின்றன. "மண்ணுளே திரியும் போது வருவன பலவும் குற்றம்" என்று நாயனார் அருளிச் செய்கிறார். உலக வாழ்க்கையில் சிறு வரவிற்றாகிய இன்பத்தையும் பெருவரவிற்றாகிய துன்பத்தையும் துய்த்தும், சிலவாகிய அறத்தையும் பலவாகிய அறமல்லனவற்றையும்

செய்ய நேர்தலின் உலக வாழ்க்கையை அடிகள் வெறுக்கிறார். தீ பற்றுக்கோடின்றி நில்லாதவாறுபோல மனமும் பற்றுக்கோடின்றி நில்லாதாகலின் உலகப் பொருளைப்பற்றி நின்ற மனத்திற்குக் கடவுட் பொருளைப் பற்றுமாறு அறிவுறுத்துகிறார். மனம் நினைத்தபடி மற்ற உறுப்புகள் செயலாற்ற வேண்டுமாதலின், ஒவ்வொரு உறுப்புக்கும் அததற்குரிய செயலைக்கடவுளைக் குறித்துச் செய்யுமாறு கட்டளையிடுகிறார்.

"மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னு காரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே"

என்பதனு லறிக. ஒவ்வொரு உறுப்புக்கும் கடவுளைக் குறித்துத் தொழில் செய்யுமாறு கட்டளையிடுவதைத் திரு அங்கமாலையிற் காண்க.

அடிகள் தம்மனத்தையும், மனத்தால் நினைத்தபடி தொழில்செய்யும் உறுப்புகளையும் அகப்பற்றோடும் புறப்பற்றோடும் செய்யும் உலக வாழ்க்கைக்கு வேண்டிய செயல்களை எண்ணவிடாமலும் செய்யவிடாமலும் தடுத்து இருபற்றுமின்றி இறைவனைக்குறித்து எண்ணவும் தொழில் செய்யவும் பழகி, அப்பழக்கத்தால் முன்போலவே பெருவாவிற்றாகிய துன்பம் எய்துதலின்றி, பெருவாவிற்றாகிய இன்பம் எய்துதலறிந்து, இறைவனைக்குறித்து எண்ணாமலும் தொண்டு செய்யாமலுமிருந்த மனத்தையும், மற்ற வுறுப்புக்களையும் எண்ணாமலும் தொண்டு செய்யாமலும் கழித்த காலத்தையும் எண்ணி எண்ணிக்கழிவிரக்கம் கொள்கிறார். நாயனார் தம் குழவிப் பருவத்தையும் இளமைப் பருவத்தையும் முதுமையின் முற்பகுதியையும் கழித்து முதுமைப் பருவத்தின் பிற்பகுதியில் சைவசவயம் புக்குச் சிவபெருமானை வழிபட்டு இன்புற்றவாதலின், சிவபெருமானை வழிபட்டு இன்புற்றகாலமே தம் கடமையைச் செய்து பயன்பெற்ற காலம் என்றும், கவலையின்றி, வஞ்சகமின்றிப்பெற்றோரோடும் உற்றோரோடும்,நண்பர்களோடும் பகைவர்களோடும்உரையாடியும்விளையாடியும் உண்டும் கண்டும் இன்புற்றுக்கழித்த குழவிப் பருவக் காலமும், கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலன்களையும்

ஒருங்கே துய்த்தற்குரிய மனைவியோடு இன்புற்றுக்கழித்த இளமைப் பருவக் காலமும் நரை திரை மூப்பினால் செய்வன செய்யாது, மாணாக்கர்களோ மக்கள்போன்ற சுற்றத்தினரோ சொன்னவற்றைக்கேட்டும், செய்தவற்றைப் பார்த்தும் இன்புற்றுக் கழித்த முதுமைப் பருவக்காலமும், தம் கடமையைச் செய்யாது பயனிழந்த காலம் என்றும், தம் கடமையைச் செய்யாது பயனிழந்த காலம் தம் வாழ்க்கைக்கு வந்து கழிந்தனவாயினும், அவை தாம் பிறப்பதற்குமுன் வந்த காலத்தைப் போலவும், தாம் இறப்பதற்குப் பின்வரும் காலத்தைப் போலவும் தம் வாழ்க்கைக்கு வாராத காலம் என்றும் பல இடங்களிற் கூறுகின்றார். அன்றியும் சமணசமயஞ் சார்ந்து, கடவுளை வணங்கிக் கழித்தகாலமும் தம் கடமையைச் செய்யாது பயனிழந்த காலம் என்று நாயனார் எண்ணுகிறார்.

"யாதோர் தேவரெனப் படுவார்க் கெலாம்
மாதேவ னலால் தேவர் மற்றில்லையே"

என்று நாயனார் கூறுகின்றாராயினும், சிவபெருமானை வணங்குதற்குச் சமண சமயம் நேர்முறை யன்மையாலும் அச்சமயக் கடவுளது வணக்கத்தால் பயன் பெறாமையாலும் அவ்வாறு எண்ணுகின்றார் போலும்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"

"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொரு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோ ளிலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண் டீச்சுரத் துளானே"

"பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"

"தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாட் போக்கி னேனே"

"பல்லுரைச் சமணரோடே பலபல காலமெல்லாம்
சொல்லிய செலவு செய்தேன்"

என்று கூறுதல் காண்க.

திருநாவுக்கரசு நாயனார் தம் வாழ்க்கையிற் பெரும் பகுதியைப் பயனின்றிக் கழித்ததற்குக் கழிவிரக்கம் கொள்ளுதலை முன்னர் அறிந்தோம். எஞ்சிய சிறு பகுதியைச் சிவபெருமானை வணங்கிப் பயன் பெற்றுக் கழித்ததற்குக் கரைகடந்த இன்பம் அடைகிறார் என்று பின்வருஞ் செய்யுள்களா லறியலாம்.

> " எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே
> பந்தம் வீடவை யாய பராபரன்
> அந்தமில் புகழ் ஆரூர் அரனெறி
> சிந்தை யுள்ளுஞ சிரத்துள்ளும் தங்கவே "

> " என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே
> மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
> செந்நெல் லார்வயல் சேறையுட் செந்நெறி
> மன்னு சோதிநம் பால்வந்து வைகவே "

உலகம், உயிர், கடவுள் என்ற முப்பொருள்களுள் உலகம் அறிவில்லாதது உயிர் சிற்றறிவுடையது; கடவுள் முற்றறிவுடையது; முற்றறிவுடைய கடவுள் உயிரிடத்துள்ள பேரருளால் சிற்றறிவுடைய உயிரைத் தன்னைப்போல முற்றறிவுடையதாக ஆக்க அதனைத் தொழிற்படுத்துகிறது. உயிர் தொழிற்படுவதற்கு உலகம் கருவியாகத் தொழிற்படுகிறது. உலகத்திற்கு அறிவின்மையாலும், உயிர்க்குச் சிற்றறிவுடைமையாலும், அவை தாமாக இயங்குதலில்லை. உடம்பு அறிவில்லாத பொருள்; உயிரில்லாத உடம்பு தானாக இயங்குதலில்லை; உயிருடைய உடம்பே இயங்கக் காண்கிறோம். உயிர்தொழிற்படுத்த உடம்பு தொழிற்படுகிறது. கண் காணும் அறிவுடையது. அது, காணும் அறிவுடையதாயிருப்பினும் மனம் தொழிற்படுத்தாவிடில் கண் ஒன்றனைக்காணாது. அதுபோல உயிர் அறிவுடையதாயிருப்பினும் தானே தொழிலியற்றுதலில்லை; கடவுள் தொழிற்படுத்தவே உயிர்தொழிற்படுகிறது. உடம்பை இயக்குவது உயிராதல்போல, உயிரை யியக்குவது கடவுளாதல்பற்றிக் கடவுளுக்கு உயிர்க்குயிர் என்ற பெயர் வழங்கப்படுதல் காண்க. இயவுள் என்ற பெயரும் இப்பொருளுடையது. (தொடரும்)

உ

சிவமயம்

காவை - அம்பலவாணத் தம்பிரான்

இயற்றிய

பி ர ா ச ா த அ க வ ல்

உரையுடன்

திருவரு ளாலே யிருநிலம் வாழ்க[1] வந்[*]
தருந்தவ முனிவன் பொருந்திய பொதியமும்[2]

செல்வமிகுந் தில்லைந[ா]கர்த் தென்வீதி யிற்சிறப்பா
யெல்லவரும் போற்ற இனிதிருக்குங்—கல்லாத்
தொந்தியயிற் றந்திநிறத் தும்பிமுகத் தங்கமறுப்
பைந்துகரத் தானைநினைந் தால்.

[1] திருவருளாலே இருநிலம் வாழ்க - சிவனது திருவுளத்தினாலே பெரிய நிலத்துண்டாகிய பார்ப்பாரும் பசுவு மிராசாவும் வாழ்க; 'கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மறையும் நாடு மென்ப' என்றார் தொல்காப்பியனார். 'வாழ்த்தும் வணக்கமும் ஏற்புடைத்தாகி' என்பதனால் முதற்கண் வாழ்த்துக் கூறியது. 'வாழ்க அந்தணர் வானவர்...........துயர் தீர்கவே'† என்பதுவும் இக்கருத்தைப்பற்றி வந்ததெனவறிக.

[2] வந்தரு......பொதியமும் - சிவபெருமான் இமவான் மகளைக் கலியாணஞ் செய்யும்பொழுது தேவர்களெல்லோரும் திருக்கலியாணஞ் சேவிக்கப் போகையால், வடபூமி தாழ்ந்து தென்பூமி உயர்ந்ததுகண்டு, தேவர்களெல்லோருந் தோத்திரஞ்செய்து வேண்ட, அப்பொழுது சிவனும் அரிய தவத்தினையுடைய அகத்தியமா முனியை வாவென்றழைத்து, 'நீபோனா லந்தப் பூமி சமமா' மென்று திருவுளஞ்செய்ய, அவரும் 'திருக்கலியாணஞ் சேவியாமல் நான் போகிறதெப்படி' என்று விண்ணப்பஞ் செய்ய, 'உனக்கு நாம்

---

*வாழவந் தென்றும்பாடம். †தேவாரம், ஞான. திருப்பாசுரம், 1.

182093

துய்யமுத் தமிழ்சேர் வையைமா நதியும்[3]
குன் றமெறிந்த வென்றி வேலன்
போற்றிவா னவர்தொழ வீற்றினி திருக்கும்
மன்றலஞ் சோலைக் குன்றநன் னாடும்[4]
பூவலர் வாவிக் காவையம் பதியும்[5]
வளந்திகழ் திசையுடன் விளங்க வந்தோன்[6]
அம்புவி புகழ்திரு வம்பல நாதன்[7]

இந்த மணவாளக் கோலமாம்படியே பாவநாசத்திற் சித்திர சபையில் வந்து காட்டுகிறோ'மென் றனுப்ப, அவரும் தென்றிசை நோக்கிப் புறப்பட்டுத் திருப்படை வீடெல்லா மடைவே சேவித்துத் திருக்குற்றாலமே வந்து சித்திரசபையிற் றிருநடனம் தெரிசித்துப் பாவநாசமே வந்து சிவனை அர்ச்சித்தவாறே பூமியையுஞ் சமதலமாக்கி, அங்கே தவம்பண்ணியிருந்த அந்தநாளிற் றிருக்கலியாண கீர்த்தியையுந் தண்டன்பண்ணிய முனிவன் தனதாசிரமமாகப் பண்ணிக்கொண்டிருக்கும் அப்பொதியமா மலையும் ;

[3]துய்ய முத்தமிழ் சேர் வையைமா நதியும் - இயலிசை நாடகமாகிய முத்தமிழினையுடைய கடைச்சங்கமாகிய திருவாலவாயில் மும்முலைத் தாடகையார் திருக்கலியாணத்திற் குண்டோதரனென்னுங் கணநாதர் நிமித்தமாக அழைப்பித்த பெரிய வையையாற்றினையும் ;

[4]குன்றமெரிந்த......குன்றநன்னாடும் - கிரவுஞ்சமென்னு மலையைப் பிளந்த வெற்றிப்பாட்டினையுடைய குமாரசுவாமியைத் தேவர்கள் தோத்திரஞ் செய்து வழிபட, சிங்காதனத்தி லெழுந்தருளியிருக்கும் மணம் பொருந்திய சோலையும் சரவணமும் பொருந்திய திருப்பரங்குன்றினைச் சூழாநின்ற நல்ல நாட்டினையும் ;

[5]பூவலர்...பதியும் - தாமரைப்பூ அலராநின்ற வாவியினையுடைய காவையெனப் பெயர் வழங்கிய திருப்படை வீடும்.

[6]வளந்...வந்தோன் - வளப்பத்தைத் தாராநின்ற பத்துத் திக்கினும் இனிய சொல்லுடன் எங்குங் கீர்த்தி பிரகாசியாநின்றோன் ;

[7]அம்புவி......நாதன் - அழகிய புவியின்கண் எல்லோராலுந் தோத்திரஞ் செய்யப்படாநின்ற திருஅம்பலவாணனென்னும் பிள்ளைத் திருநாமத்தையுடைய ஆசாரியன் ;

சிவனரு ளாலருள் திருமந் திரத்தை[8]த்
தவநெறி யொழுகுந் தக்கோர்க் குரைத்தனன்[9]

---

[8]சிவ.........மந்திரத்தை - சிவன்றனது கிருபையினாலருளிச் செய்த திவ்யாகமங்களுட் காமிக முதலிய ஒன்பதாகமத்தையும் திருமூலதேவ நாயனார் அது குறித்து அருளிச்செய்த திருமந்திர மாலையையும் உற்று நோக்கி ; காமிக முதலிய ஒன்பதாவன :

"பெற்றநல் லாகமங் காரணங் காமிக
முற்றநல் வீரம் சிறந்தமெய் வாதுளம்
மற்றநல் வியாமள மன்னுகா லோத்தரஞ்
சுத்தநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே." [திருமந். 63.]

எனத் திருமந்திரத்திற் கூறினார். அதற்குத் திருமந்திரமென்னும் பெயர்க் காரண மெத்தாலென்னில்,

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப." [தோல். பொருள். 481.]

என்றார் தொல்காப்பியனாராதலானும், திருமந்திரம் எனப் பெயராயிற்று. எனவே, இதற்கு முன்னூலின் [பெயர்] யாதென்னில்: சித்தாந்த சைவமெனவும் தெக்ஷிண சைவமெனவும் வாமசைவமெனவும் சைவம் மூன்றுவிதப்படும். இம்மூவகைக்கு மாகமம் யாதென்னில் காமிகாதி வாதுளாந்தஞ் சித்தாந்த சைவ சாத்திரமெனப் பெறும். சச்சந்த வளிதாதி தெக்ஷிண சைவ சாத்திரமெனப் பெறும். மூலதந்திராவதாராதி வாம சைவமெனப்பெறும். ஆதலால் இந்த மூலதந்திராவதாரமே திருமந்திரத்துக்கு முன்னூலெனப் பெறும். அத்திருமந்திரம் வழிநூலெனப் பெறும். இவ்வாசிரியர் இவ்விரண்டினையும் உற்று நோக்கிச் சார்பு நூலாக இந்நூலை அருளிச் செய்தார். இந்நூல் யாவர்க்குரைத்தனரென்னில்,

[9]தவ.........த்தனன் - பூமியின்கண் அரிய தவசினைப்பண்ணி யோகபாதத்தின்வழி நாடோறும் அனுட்டித் தொழுகும் ஞாதாக்களுக் குரைத்தனர். எனவே பாயிரங் கூறியதாயிற்று. அஃதெக் காரணத்தாலென்னில்,

'ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே' [நன்னூல். 46.]

என்னும் இலக்கணத்தால் இதனை யாக்கியோன் பெயர் - திருவம்பலவாணன் ; வழி - திருமந்திரத்தின் வழி ; எல்லை - மதுரை மண்டல

போற்றிய தலைமை நாற்சது ரத்து
ளோங்கா ரஞ்சேர் ரீங்கா ரத்து
மூலை, இரண்டினுஞ் சாலத் தோன்றி[10]
யிடைபிங் கலைக ளிடம்வல நிற்கு[11]
மேலை மூலை மூல மாகச்[12]
சுழுமுனை* சித்திரம் வழுவில் வச்சிர
மொன்றுக் கொன்று சென்றுள் ளாகி[13]
யுரைசெய் கோணத் தொருதலை சொருகி[14]
யிருதலை திரண்ட வொருவேய் போலக்
கோணற நிற்கும் வீணை தண்டி
னூடே யூடி[15] நாடி மூன்றும்

மென்னும் பதி; நூற் பெயர் - பிராஸாத அகவல்; யாப்பு - அகவற்பா; நுதலிய பொருள் - கலைகளின் முறைமையும், மேதைகலை அர்க்கீசகலை முதலிய கலைகளினுடைய பிராசாத வியல்பும்; கேட்போராவார்—மாணாக்கருட் டக்கோர்; பயன் - வீடுபேறு. இவைகளாற் பாயிரங் கூறியதாயிற்று. இங்ஙனம் பாயிரத்தின் முறைமையை யுணர்த்தி சோடச [கலா] பிராசாதத்தினுள் தலைமையாகிய நாடிகளின் முறைமை யுணர்த்திற்று.

[10]போற்றி...தோன்றி - பஞ்சபூதத்தினுட் டலைமையாகிய பூமி நாற்கோண வடிவாதலின், அதன்மேலே மூலாதாரத்துக்கு வடிவாகிய முக்கோணத்தினுள் தாழ்ந்த மூலைகளிரண்டனுள் ஹோங்காரமும் ஹ்ரீங்காரமும் ஆகி இரண்டுந் தோன்றி;

[11]இடை...நிற்கும்-ஹோங்கார மிடமாக இடையும் ஹ்ரீங்காரம் வலமாகப் பிங்கலையுந் தோன்றி மேலே செல்லும்;

[12]மேலை...மாக - அக்கினி சிகை போன்றிருக்கிற மேலாகிய கோணமே யடியாக;

[13]சுழு...ளாகி - சுழுமுணா நாடியும் சித்திர நாடியும் அதனை வழுவுதலில்லாத வச்சிர நாடியும் ஒவ்வொன்றும் ஒரு நாடிக்குள்ளொருநாடி யுள்ளேயாகி;

[14]உரை...சொருகி - முற்கூறிய மூலாதாரத்து நுனிக்கோணத்திலே சுழுமுனை யடியாகி;

[15]இருதலை...யூடி - வீணைதண்டானது இரண்டு தலையுந் திரண்ட மூங்கிற் குழல்போல வளைவின்றி நேரே நிற்க வீணைதண்டின் நடுவே யாயிரகோடி மின்னிறம் போன்ற தாமரை நூலானது

பி - ம்—*சுழுனை.

பிரம ரந்திர முருவி நிற்கும்[16]
இடைபிங் கலைகண் நடுவுதண் டுடனே
தொடர்வறப் பின்னி யடைவா தார
மாறினுங் கூடி வேறுவே றாகிப்
புருவ மத்திம மருவி நாசிக்
கிடமும் வலமு மிடமென நிற்கும்[17]
முந்தியந் தாமரைக் கந்த மேவி[18]

துவாரத்தினின்றும் புறப்படுவது போல வீணைதண்டிற் றுவாரத்தைப் பொருந்தி;

[16]நாடி...நிற்கும் - முற்கூறிய சுழுமுனைநாடியும் சித்திராநாடியும் வச்சிரநாடியுமாகிய மூன்றும் பிரமரந்திரமளவாகப்பொருந்தி நிற்கும்; இங்ஙனம் சுழுமுனையின் முறைமைகூறி, மேல் இடைபிங்கலைகளின் போக்குவரத்தும் முறைமையும் உணர்த்தினார்.

[17]இடை...நிற்கும் - முற்கூறிய இடை பிங்கலைகளிரண்டும் தனித்தனியாய் வீணைதண்டினுடனே கூடி மாறினும் அடைவே கத்தரிகைக் கால்போலக் கூடிக் கூடிப் பிரிந்து அதினின்றும் பிரமரந்திர மளவுஞ் சென்று பின்பு புருவ மத்திமத்தை வந்து பொருந்தி யுச்சுவாச நிச்சுவாசத்துக் கிடமாய் நிற்கும்;

உடையவன் பாரித்த வொண்பொருள் மூன்று
மிடையொன்று மிரண்டு மியக்கறுங் காலம்
இடைநின்ற வாதார மேழு மழிய
இடைநின் றுளானங்கு மெய்நின்ற வாறே.*

இம்மந்திரத்துள் மூன்று மென்றது சித்திரநாடி, வச்சிரநாடி, சுழுமுனை நாடிகளை. இரண்டு என்றது இடைபிங்கலைக ளிரண்டாகும் உச்சுவாசம் நிச்சுவாசம். ஆலம் வித்திற் சாகோபசாகை அடங்கித் தோன்றுமாறு போலச் சுழுமுனை முதலிய வைந்தினுள் எல்லாம் அடங்கி விரிந்து காரியப்படும். அஃதெங்ஙன மென்னில்,

[18]உந்தி.....மேவி - குண்டலி ஸ்தானமாகிய உந்தியில் ஒன்பதங்குலத்தையுடைய மாணிக்க நிறம் போன்ற தாமரைக் கிழங்கைச் சுழுமுனைபொருந்திய அல்லிக்கிழங்கானது கிழங்கொன்றாய்க் கொடி பலவாய்ப் புறப்படுமாறுபோல எழுபத்தீராயிர நாடிகளும் நீரிற் கிடந்து சீரணமான வரை சிலையினாம்புபோல நாடிகள் சரீரமெங்கும் வியாபித்து நிற்கும். நாடிகளின்வித்தி யறியுமிடத்து, விரிவில் இருபத்தெட்டுக் கோடியாம். வகையில் எழுபத்தீராயிர நாடிகளாம்.

*இந்தச் செய்யுள் அச்சிட்ட திருமந்திரப் பிரதிகளிற் காணப்படவில்லை.

இடையினுங் கலையினு மெழுந்தைந்து நாடி
இடமு வலமு நடுவு மேல்போய்க்
கண்வாய் செவியென கண்ணி நிற்கு[19]

தொகையில் முப்பத்திரண்டு நாடிகளாம். இதிற் சிறப்பு பத்து நாடிகளாம். அதிற் சிறப்பு மூன்று நாடிகளாம். அது தன்னிலும் சிறப்பொன்றென அறிக. முப்பத்திரண்டு நாடிகளாவன: 1. இடை, 2. பிங்கலை, 3. சுழுமுனை, 4. காந்தாரி, 5. அத்தி, 6 சிங்குவை. 7. பூடா, 8. எச்சுவினி, 9. அலம்புடை, 10. குகு, 11. சங்கினி, 12. வாலினி, 13. இலாகினி, 14. மோகினி, 15. கம்பினி, 16. மேதினி, 17. விகுருதி, 18. விஷமா. 19. மானினி, 20. அங்கினி, 21. விசுவமாலினி, 22. கேகனி, 23. கோஷினி. 24. தேசினி, 25. இராசவாசினி, 26. வாகினி, 27. தாணி, 28. இராசபோசினி, 29. இராசக்கினி, 30. சீதவீரியை, 31. உஷ்ண வீரியை, 32. பரிசனைவசிகா எனக் கூறிய முப்பத்திரண்டிக்குந் தானமுந் தொழிலும் மேல் விரித்துணர்த்துதும். இந்நூலுட் சுருக்கிக் கூறியது இடை முதலிய பத்து நாடியுமென வறிக.

[19]இடை......நிற்கும் - இங்ஙனம் கூறிய நாடிகளின் வியாபாரத்தை யறியும்படித்து உந்திக் கமலத்தினின்று இடை பிங்கலை சுழுமுனையி[னின்று] மவ்வைந்து நாடியாகப் புறப்பட்டு இடது கையினும் வலது கையினும் கண்முதலிய தானங்களினும் பொருந்தி நிற்கும். அவை வருமாறு :—இடையினின்றும் தேகனி, தோஷனி, தேசனி, இராசவாகினி, வாகினி என்னும் நாடிகளைந்தும் இதயத்து நின்று மேலே புறப்பட்டுக் கண்டத்தைப் பொருந்திப் பின்பு கக்ஷத்தின்கண் வந்து இடதுவாகுவை யடைந்து முழங்கை மணிபெந்தம். அங்குலிகளைந்தினும் பொருந்தி நிற்கும். பிங்கலையினின்றும், தாணி, இராசபோசினி, சங்கிரியை, சீதவீரியை, உஷ்ணவீரியை என்னும் நாடிகளைந்தும் இதயத்தினின்றும் மேலே புறப்பட்டுக் கண்டத்தைப் பொருந்திப் பின்பு கக்ஷத்தின்கண் வந்து வலதுவாகுவை யடைந்து முழங்கை, மணிபெந்தம், அங்குலிகளைந்தினும் பொருந்தி நிற்கும். காந்தாரி என்னும் நாடி சுழுமுனையினின்றும் புறப்பட்டு இதயம், கண்டம், தாலு, புருவமத்திமத்தைப் பொருந்திப் பின்பு கண்டத்திலிறங்கித் தலையிற் சென்று வலதுகண்ணிடமாயிருந்து பார்க்கும். அத்தியென்ற நாடி சுழுமுனையினின்றும் புறப்பட்டு முன்புபோலே சென்றிறங்கி, இடது கண்ணிடமாகவிருந்து பார்க்கும். சிங்குவை யென்னும் நாடி சுழுமுனையினின்றும் புறப்பட்டு முன்புபோலே சென்றிறங்கி முகத்தைப் பொருந்தி...பானியா நிற்கும். பூடாவென்னும் நாடி சுழுமுனையினின்றும் புறப்பட்டு முன்புபோலே சென்றிறங்கி வலது கன்னத்தைப் பொருந்தி

முன்னர்ச் சொன்ன வங்கிலை தன்னின்[20]
மூன்று நாடி தோன்றிக் கீழ்போய்க்
குதத்து மிலிங்கத்தும் பகுத்துட னிற்கு[21]

எல்லாச் சத்தங்களையும் கிரகிக்கும். எச்சுவினி என்னும் நாடி சுழுமுனையினின்றும் புறப்பட்டு முன்புபோலே சென்றிறங்கி இடதுகன்னத்தைப் பொருந்தி எல்லாச் சத்தங்களையுங் கிரகிகும். பரிசனை என்னும் நாடி வலது விலாப்புறத்திலும், அவகாசிகா யென்னும் நாடி இடது விலாப்புறத்திலும் பொருந்தி நிற்கும்.

[20]முன்னர்......தன்னில் - இடை பிங்கலைகளிரண்டும் நாபிக்கமலத்தினின்று[ம் கீழ்]நோக்கிப் புறப்பட் டிரண்டு பாதத்திற் பெருவிரலிலு மிறங்கி நிற்கும். அஃதன்றி வாலினி, இலாகினி, மோகினி, கம்பினி, மேதினி என்னு மைந்து நாடியும் நாபியினின்றுங் கீழ்நோக்கிப் புறப்பட்டு வலது பாதத்திற் கூடித்தல(ம்), முழந்தாள், காடு இவைகளைப் பொருந்தி பஞ்சாங்குலிகளி னிற்கும். விகுருதி, விஷமா, மானினி, அங்கினி, விசுவமாலினி என்னும் ஐந்து நாடியும் நாபியினின்றும் கீழ்நோக்கிப் புறப்பட்டு இடது பாதத்திற்கு அடித்தலம், முழந்தாள், காடு இவைகளைப் பொருந்தி பஞ்சாங்குலிகளினிற்கும்.

[21]மூன்று......னிற்கும் - மேனோக்கி யோடுகிற சுழுமுனை நாபிக் கமலத்து நின்றும் அலம்புடை என்கிற நாடியுடன் கீழ்நோக்கி நடுவே புறப்பட்டு இலிங்கத்தைப் பொருந்தி நிற்கும். அந்தப்படியே குகுவென்னு நாடி கீழ்நோக்கி யதனுடன் கூடிப் புறப்பட்டுக் குதத்தைப் பொருந்தி நிற்கும். அந்தப்படியே சங்கினி என்னும் நாடி அதனைப் பொருந்தி நாபி மூலத்தின் நடுவே நின்று நாபிக்குக் கீழுங் குதத்துக்கு மேலுஞ் சஞ்சரியா நிற்கும். வாயு பலவுளவாயினும் பிராணாதி வாயுக்கள் பத்தும் பிரதானமாய் நாடியினடுவே பொருந்திச் சஞ்சரிக்குமெனவறிக. அஃதெவ்வாறென்னில் இராசவர்த்த நிறம் போன்ற பிராணவாயு சுழுமுனையுடனே கூடிச் சஞ்சரியா நிற்கும். சாற்காலத்துச் சந்திரனை [யொத்து] பனிநிறம் போன்ற உதான வாயு பிங்கலையுடனே கூடிச் சஞ்சரியா நிற்கும். இந்திரகோபம் போன்ற அபான வாயு அலம்புடையுடனும் குகுவுடனுங் கூடிச் சஞ்சரியா நிற்கும். பால்நிறம்போன்ற வியான வாயு காந்தாரி, அத்தி, சிங்குவை, பூடா, எச்சுவினி என்னும் நாடிகளைந்தினும் பொருந்தி அந்த நாடிகளிருக்குந் தானங்களிலே கூடிச் சஞ்சரியாநிற்கும். வாயுக்களில் பிராணாதி ஐந்துமே தலைமையாதலால் இவைகளின் நிறமும் நாடிகளுடன் கூடிச் சஞ்சரியாநிற்கு முறைமையுங் கூறினார்.

மன்னு மபான மிலிங்க முந்தி
உன்னு மார்பு களநுத லுச்சி
சொன்ன தானந் தன்னின் னாம
மூலா தாரஞ் சுவாதிட் டான
மேன்மணி பூரகம் அனாகதம் விசுத்தி
யாக்கினை பிரம ரந்திர[22] மிதன்

ஏனையவும் வந்துழிக் காண்க. அந்தப் பிராணாதி வாயுக்களின் காரியப் பாடு யாதென்னில்,

'உரத்துற் றுயிர்நாசி யுள்ளோடி மீளு
மரிகதிரில் நீரு மபானன்—இருக்குமிட
நாபிக்கீழ் நாபி நடுநண்ணி யுதானன்
வாயிலினைத் தாபிக்கு மக்காரத்தைத்—தான்...
அன்னத்தின் சாரத்தை நாடிதொறு மாக்கியிடும்
பின்னுஞ்ச மானன் படிவத்தைப்—மின்னும்
வியானன் சுழற்சிமுதன் மெய்வினை செய்விக்கு
நயான நகச்செய்யு நாகன் ....
கண்ணையிமைப் பித்திடுங்காண் கூர்மன் கிருகரன்றான்
விண்ணினிற் போற்றுமல விளைப்பிக்கும்—பண்ணுவிக்குங்
கொட்டாவி தேவதத்தன் கூறுந் தனஞ்செயன்மெய்
விட்டுமுயிர் நீக்கிவிக்கு மெய்'

என்பதனாலறிக.

இவ்வாசிரியர் பிரதானமான பத்து நாடிக்குங் கூறியிருக்க, ஏனைய நாடிகளையும் வாயுக்களையுங் கூட்டிக் காரியப்பாடுணர்த்தில் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றமாகாதோ என்னில், ஒப்பின் முடித்தலென்னுந் தந்திரவுத்தியாற் கூறியதென அறிக. இப்படியே நாடிகளின் பகுதிகளையும் வாயுக்களின் பகுதிகளையு முணர்த்தி மேலாதார நிலைமைக்குத் தான முணர்த்துகின்றார்.

[22]மன்னு......பிரமரந்திரம் - இந்தத் தானங்களின் பெயரை யடைவில் (லியு) [சொல்லு]மிடத்து நிலைபெற்ற குதத்துக்கு இரண்டங்குலத்துக்கு மேலும் இலிங்கத்துக்கு இரண்டங்குலத்துக்குக் கீழும் மூலாதாரம். குய்யத்தானத்துக்கு மேல் நாலங்குலஞ் சுவாதிஷ்டானம்; நாபிஸ்தானத்துக்கு மேல் எட்டங்குலம் மணிபூரகம். இதயத்துக்கு மேற் பத்தங்குலம் அனாகதம்; கண்டத்தின்மேற் பன்னிரண்டங்குலம் விசுத்தி. தாலு ஆறங்குலம்; புருவமத்திமையி

மேற்சொல் வன்னிதழ்[23] விளம்புங் காலை
நாலா றீரைந்து நண்ணு மீரா
றேலு மீரெட் டிரண்[24]டோன் றாயிரம்

லிரண்டங்குலம் ஆக்கினை; உச்சியில் நாலங்குலம் பிரமரந்திரம். இவ் வடைவே ஆதார முதலிய தானங்களிற் பெயரை யடைவிற்பெறும்.

"மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித்த யோனிகள் எழுவிரற்* கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளெழு செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழதே" [திருமந். 580.]

என்பதனா லறிக.

'குதத்துமே லிருவிரற் குய்ய நா[ல்] விர
லிதத்திடு நாபி யோடிட் டிதையம்
பதத்த பத்திரு நாவியி லீராறு மன்னிடுந்
துதித்த நாவடி தனிலாறுஞ் சுற்றுமே.

நெற்றியி லிருவிரல் நிற்க நின்றபின்
னுற்றதோர் நால்விர லுச்சியி னெல்லையாய்
நெற்றிய நாற்பத்தெண் விரல்க ணாடொறுங்
கற்றவ ரிதுநிலை கண்டு கொள்ளுமே.'

என்றிவ்வாறு சொல்வாரு முளர்.

ஆன்மா இதயகமலத்திற் பிரதானமாயிருந் தெல்லாக் காரியங் களையும் உன்னுதலால் உன்னுமார்பமெனச் சிறப்பித்தார். எல்லாவற் றிற்கு முந்தியது ஆதாரமாதலால் மூலாதார மென்றார்.

[23]இதன்...இதழ் - இந்தத் தானங்கடோறு மிருக்கும் இத ழெண்களைச் சொல்வாம்;

[24]விளம்புங்...டிரண்டு - அந்தப் பத்மத்தி னிதழ்களைச் சொல்லு மிடத்து ௪, ௬, ௧௦, ௧௨, ௧௬ எனக் கூறிய இதழ்களையும் விரித் துச் சொல்வாம். அஃதெங்ஙனமென்னில் மூலாதாரத்திற் றோன்று மிதழ் ௪. இதனக்ஷரம் வ. ஶ. ஷ. ஸ. இதற்கதிதேவதை விநாயகன் வயிரவன், க்ஷேத்திரபாலன், சண்டன். சுவாதிஷ்டானத்திற் றோன்று மிதழ் ௬. இதனக்ஷரம் 𑌬, 𑌭, 𑌮, 𑌯, 𑌰, 𑌲. இதற்கதிதேவதை பிரதிஷ்டை, சுத்த தவிரிணி பாவனை, இருடி, பத்மினி, பரமயோகி என அறுவர். மணிபூரகத்திற் பத்மதளம் ௧௦. இதனக்ஷரம் 𑌡, 𑌢, ண, 𑌤, 𑌥, 𑌦, 𑌧, ந, 𑌪, 𑌫. இதற்கதிதேவதை தூலார்க்ஷி, நீலார்க்ஷி

பி - ம்—*யோனிக் கிருவிரற்.

மறுவறு தாமரை[25] நிறமது நிகழ்த்தில்[26]
வெண்மை பொம்மை செம்மை படிகந்
தண்மைதரு குருந்து புகைத்திரள் பளிங்கு[27] முன்

கயிலாவினி, புலங்கினி, உபாகினி, உட்டணி, கைவாசனி. நேத்திரகரி, தவணி, நவனி எனப் பதின்மர்.

அனாகதத்திற் பத்மதளம் ௧௨. இதனக்ஷரம் ௧௨. க, வ, ம, வ, ஈ, உ, ஊ, ஜ, க, ஜூ, ட, ௦. இதற்கதிதேவதை அபினி, பிரதனி, சோஷிகாயொணினி, வேணி, ஆக்ஷணி, சாமுண்டி, விராடி, துர்க்கை, சேட்டை, ஆரணி, சுரணி ஆகப் பன்னிருவர்.

விசுத்தியிற் பத்மதளம் ௧௬. இதனக்ஷரம் க, கூ, ஐ, ஈ, உ, ஊ, ஜீ, ஜீ, ள, ளூ, ஏ, ஐ, ஒ, ஔ, அம், அஃ. இதற்கதிதேவதை மாண்டி, புட்படி, தரி, சிருங்கி, வடா, அசனி, இரவுத்திரி, தாமகாரணி, சாயா, அற்பாசனி, காளி, துருள்ளாசி, பூவை, சாரிணி, கலாசி கமலா எனப் பதினறுவர்.

ஆக்கினையிலிருக்கும் பத்மதளம் ௨. அதனக்ஷரம் ஹ, க்ஷ. இதற்கதிதேவதை சுந்தரி, ஆனந்தி என இருவர்.

[25]ஒன்று...தாமரை - பிரமரந்திரத்திற் குற்றமற்ற ஆயிரமிதழை யுடைத்தா யிருப்பதொரு தாமரை. இதற்கதிதேவதை சிவசத்தி. ஆக இங்ஙனங் கூறிய ஐம்பத்தொரு தேவதைகளும் தொழிலினாலும் ரூபகம்பண்ணி யுணாத்தினர்.

'நாதப் பறைகொட்ட நால்வரும் வந்தனர்
நல்ல வருவறு மியாழ்கொண்டு வந்தனர்
......பதின்மரும் பன்முறை யறைகின்றனர்
பன்னிரு மங்கையர் தாளங்கை கொண்டன
ராடப் பதினறு மங்கைய ரோடே
யாயிழை யாரிருவர் வீணை முழக்கினர்
கூடாத கன்னி குலாவி யுலாவிடக்
கோதண்ட நாயகன் கூத்துகந் தானே' என அறிக.

[26]நிறமது நிகழ்த்தில் - அந்தத் தாமரை யிதழ்களின் நிறங்களைச் சொல்லுமிடத்து.

[27]வெண்மை......பளிங்கு - மூலாதாரம் முதலியன அடைவே தாமரை யிதழ்கள் இங்ஙனங் கூறிய வெண்மை முதலிய நிறங்களைப் பொருந்தி நிற்கும்.

சொன்ன தானஞ் சொறிதழற் றியான
மன்னுமுக் கோணம்[28] வயங்கு நாப்பண்
இயங்கு மசபை[29] நயந்தினி துரைக்கில்[30]*
இருபத் தோரா யிரத்தறு நூறு

[28]முன்......கோணம் - முன்னர்க் கூறிய மூலாதாரம் நிலை பெற்ற முக்கோணமாய் அக்கினிச் சுவாலை போன்றிருக்கிறதாக நினைக்க ;

[29]வயங்கு......மசபை - வலியினையுடைய முக்கோணத்தின் நடுவே சோமசூரியாக்கினி ரூபமாய் ஹம்ஸ என்னு மூன்றெழுத்தினையுடைய அசபை மந்திர மூலாதாரத்தின்கண் விளங்காநிற்கும்;

நாபிக்குக் கீழாக நால்விரல் மாடத்தே
தாபிக்கு மந்திரந் தன்னை யறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே. [திருமந். 579.]

அருவினி லம்பர மங்கெழு நாதம்
பெருந்துடி யிடையாம் பேணிய விந்து
மருவும் ஹகார ஸகாரம தாகி
மருவி யுடலுறு மந்திரத் திறனே. [திருமந். 960.]

என்ற திருமந்திரத்தாலு மறிக.

[30]நயந்தினிதுரைக்கில் - அந்த அசபை மந்திரம் இயங்கு முறைமையை அறிந்து சொல்லில்; பிராணவாயு இலாடத்தினின் றுதித்து நாடாவினால் ஓடுமாறுபோலச் சித்திரநாடியாலே இழிந்து மூலாதாரத்தில் ஓமென்றுதித்து நாபிசக்கிரத்திலே ஹம் என்று முட்டி இடைபிங்கலைகளிலே ஸம் என்றேறிக் கபாலத்தைச் சுற்றும். அஃதெங்ஙனமென்னில் இந்திகாதி புவனத்தில் பிரதானமாகிய ஊர்த்த காமினி கலையிற் கோடி சந்திரபிரபைபோல சுழுமுனேசர் இருப்பர். அவருக்கு இடத்தும் வலத்தும் இடைபிங்கலைகள் இருக்குந்தானமாதலால் கபாலத்தைச் சுற்றியதென வறிக.

'பிரிவிலாப் பிராண வாயு நெற்றியிற் பிறந்த மூலத்
தறிவினு லோமென் றந்த நாடியி லங்கென் றேறி
செறிவினூற் சங்கென் றேறிச் சிறந்தபிங் கலையி டைக்கே
குறியினுன் முன்னுன் கேறி எண்விரல் மீளுங் கொண்டே'

என்பதனுலறிக. அஃதெவ்வாறென்னில்.

* துரையும் என்றும் பாடம்,

மருவிய வாயு வலமிட மாக
மாறி மாறி வேறுபா டாகிப்
பூத மைந்தினுந் தோன்றி* நாழிகை
யொன்றுக் கொன்று குன்று தெழுந்து
பன்னிரண் டங்குல முன்னி யோடி
யிருநாலு மீண்டங் கொருநா லொழியு[31]
மிந்தக் கருத்தை சிந்தித் தறிவா
லந்த வாதார மடைவோ ரேழினும்[32]

[31]இருபத்......ஒழியும் - அந்தப் பிராணவாயு நாளொன்றைக்கு ஒருவர்க்கிருபத்தீராயிரத்து அறுநூறு சுவாசமா யிடைபிங்கலைகளைப் பொருந்தி ஆகாசமுதலிய பூதங்களைந்தினும் கத்திரிகைக்கோல் போல ஆதாரங்கடோறும் மாறிமாறி அதற்கதற்கு வேறுபாடாய் ஆகாசத்துக்கு அஞ்சரையும், வாயுவுக்கு அஞ்சேமுக்காலும், தேயுவுக்கு ஆறும், அப்புவுக்கு ஆறேகாலும் பிருதிவிக்கு ஆறரையுமாகச் சொன்ன நாழிகையினடைவே ஒன்று குறையாமலும் உச்சுவாச நிச்சுவாசமாய்ப் பன்னிரண்டங்குலம் நாசியினின்றும் புறம்பே புறப்பட்டு எட்டங்குலம் மீண்டு உள்ளே சென்று, பழைய தானத்திலே பொருந்தி நின்று நாலங்குலமும் புறம்பே லயத்தை யடையும்;

'ஒன்றினோ டொன்றுமோ ரைந்தினோ டைந்து
முயிர்ப்பறு மாகாதே' எனவறிக.

[32]இந்த......எழினும் - நாடோறும் உச்சுவாசமாய் வாயுக்கள் சஞ்சரிக்கு முறையை யாதார மேழினும் அசபை மந்திரத்தைப்... நிச்சுவாச பிரித்துப் பிரித்து கணபதி முதலிய பேர்களிடத்திலே சமர்ப்பணஞ் செய்வான்.

'நாலிதழ்க்கு நடுவேவிநா யகனல்ல
வாறுமலர் மேற்பிரமனும்
வேலையுள்மா யனும்பரிந்து மாமலர்
பத்துளுந் தங்கவே
சாலநான் மூன்றிதழ்க்கே யுருத்திரன்
றக்கபத் தாறிதழுள் மகேச்வரன்
கோலமான விரண்டா மிதழுளே
குருவிருந்து குலாவிய கோலமே'

என ஆதாரா அதிதேவதை யறிக.

இவர்களுக்குக் கொடுக்கு முறைமை எவ்வாறெனில்,

பா - ம்—*ஐந்தினுக் கோது நாழிகை.

பந்தமற நிற்கும் பவனமறு நூறு[33]
மூன்று றுயிர மூன்றிட மருவி[34]
மூன்றிட மூவா யிரமென நிறுத்தின
மந்திர மாமெனத் தந்திரஞ் சொல்லு[35]
முன்னு மசபை யோங்கா ரத்து
மன்னு[36] தாபரங் காமிய மலமா
முந்தி மேனு லங்குலி யகாரம்
வந்த தெய்வ மலரயன் மூன்று

[33]பந்தமற......நாறு - நாடோறும் ஆன்மாக்களாற் சித்தகர்ம க்ஷயம் பிறக்கையின் பொருட்டு மூலாதாரத்தின் வாயுவுடன் பொருந்திய அசபா மந்திரம் அறுநூறையும் அதிலிருக்கும் விநாயகனுக்கு இரவும் பகலுமாக நான் தனித்தனியே கொடாநிற்கிறேனென்று விண்ணப்பஞ்செய்வான்;

[34]மூன்று......மருவி - சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதமெனக் கூறிய ஆதாரம் மூன்றுக்கும் ஒவ்வொன்றுக்கும் அசபா மந்திரம் ஆறுயிரம் ஆறுயிரமாகப் பிரமன் மால் உருத்திராகிய அதிதேவதைகளிடத்து இரவும் பகலுமாக நான் தனித்தனியே கொடாநிற்கிறேனென்று விண்ணப்பஞ் செய்வான்;

[35]மூன்று......சொல்லும் - விசுத்தி, ஆக்கினை, பிரமரந்திரமெனக் கூறிய ஆதாரம் மூன்றுக்கும் ஒவ்வொன்றுக்கும் அசபா மந்திரம் ஆயிரமாயிரமாக மஹேஶ்வரன், குரு, பரசிவன் ஆகிய அதிதேவதைகளிடத்திலே இரவும் பகலுமாக நான் தனித்தனியே கொடா நிற்கிறேனென்று விண்ணப்பஞ் செய்வான். இப்படிக் கொடுக்கிறதுதானே அசபா மந்திரமென்று **மூலதந்திராவதார**மாகிய ஆகமஞ் சொல்லும். நாடோறும் இப்படி இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசத்தையும் அந்தந்த ஆதாரங்களிற் கொடுத்தலே அசபாசெபஞ் செய்தலாம்.

[36]உன்னு........மன்னும் - நாடோறும் உச்சரிக்கப்படாநின்ற அசபாமந்திராதியிலே பிரணவத்தைப் பொருந்தும்; இங்ஙனம் அசபையின் முறைமையை யுணர்த்தி மேல் மூலாதார முதலிய பிண்டத்தினியல்பையும் பிருதிவி முதலிய அண்டத்தினியல்பையும் உணர்த்துவான் றொடங்கினார்.

[37]தாபரங்........பிண்டம் - நாபிக்கமலத்துக்கு மேல் அகாரம் நாலங்குலம் வியாபகத்தையுஞ் சிறப்பினையுடைய மூன்று மாத்திரையையும் அக்கினிச்சுவாலைபோன்ற நிறத்தினையும் தாபர யோனியையுங் காமிய மலத்தையும் பத்மத்திற்றோன்றிய அதிபதியாகிய பிர

சிறந்த மாத்திரை நிறந்தழற் கொழுந்து
ஆனது பிண்ட[37] மண்டம் பிருதிவி
பகரில்[38] நூறு யிரகோடி யோசனை
யகல முயரங் கனமொரு கோடி
புவித்திற மான நிவிர்த்தி கலையே[39]
அகாரத் துக்கு மேலெட் டங்குலி
யுகார மாகு முயர்தெய்வம் விட்டுணு
யிரண்டு மாத்திரை யிருகதிர் நிறமே
யோனி யூர்வன விழுகு மலமாம்
பிண்டஞ்[40] சேறுமப் பண்டஞ் செப்பிற்
பத்துநூ றுயிர கோடி யோசனை

மாவையுமுடைத்தாய்ப் பிண்டத்தின்கண் மேதாகலை விளங்கா நிற்கும். இதனையறிந்து தியானிக்கிற் பிரமலோகத்தை யடைவன். 'மூவள பிசைத்த லோரெழுத் தின்றே'* எனத் தொல்காப்பியனார் ஓதியிருக்க, ஈண்டு மூன்று மாத்திரையெனக் கூறியது என்னையெனின், அளபெடையின்கண் கூறியதென அறிக.

[38]அண்டம் பிருதிவி பகரில் - பிருதுவியின்கண் உண்டாகிய அண்டத்தின் விதியைச் சொல்லுமிடத்து ;

[39]நூறுயிர......கலையே - நூறுயிரகோடி யோசனை உயரத்தையும் அகலத்தையு முடைத்தாய் அதிற் கோடி யோசனை அண்டகடாக வோட்டிற் கனத்தையு முடைத்தாய்ப் பிருதிவி தத்துவத்தையுடைய நிவர்த்திகலை விளங்கா நிற்கும்; இப்பெயர் எக்காரணத்தாலெனில் தன்னையடைந்த ஆன்மாக்களைக்கீழே திரும்ப விடுகையால் நிவர்த்தியெனப் பெயராயிற்று. எகார மீற்றசை.

[40]அகார......பிண்டம் - முற்கூறிய அகாரத்தின்மேலே உகாரம் எட்டங்குலி அகலமு முயரமும் வியாபித்து இரண்டு மாத்திரையையும் அதற்கு அதிதேவதையான மாயனையும் பெரிய ஆதித்த பிரகாசம்போன்ற நிறத்தையும் பாம்பு முதலிய யோனியையும் ஆணவமலத்தையுமுடைய பிண்டத்தின்கண் அர்க்கீசர் கலை விளங்கா நிற்கும்; இதனையறிந்து தியானிக்கில் விஷ்ணு லோகத்தையடைவன்.

[41]சேரு......கலையே - அப்பு தத்துவத்தில் அண்டத்தின் விதியைச்சொல்லப் பத்துநூறுயிரகோடியோசனை உயரத்தையும் அகலத்தையுமுடைத்தாய் அதிலிரண்டுகோடி யோசனை அண்டகடாகமாக ஒட்டிற் கனத்தையு முடைத்தாய்ப் பிரதிட்டா கலையைப் பொருந்தி

*தொல். எழுத்து. 5.

யொத்த வகல முயரங் கனமே
யிரண்டு கோடி யென்பது விதுவே
பரந்து நிற்கும் பிரதிட்டா கலையே[41]
யுகார மீதே மகாரமெட் டங்குலி
நிகரில் தெய்வமுருத் திரன்மாத் திரையொன்று
மெய்யிருள் விளக்கு மின்னிறம் *பிண்டந்[42]
தேயு வண்டந் தெரியுங் காலை
யிருபது நூறு யிரகோடி யோசனை
கருதிய வகல முயர மாகு
மான்ற கனமொரு மூன்று கோடி
சுத்த மான வித்தியா கலையே[43]
மகாரத் துக்கு மேலெட் டங்குலி
நிகரில் விந்துத் தெய்வ மகேசுரன்
மாத்திரை யரையொளி †தெளிதரு விளக்கே

நிற்கும். இப்பெயர் எக்காரணத்தாலென்னில் தன்னையடைந்த ஆன்மாக்களைக் கீழே திரும்ப விடாது மேலே தானே வைக்கையால் பிரதிட்டை யெனப் பெயராயிற்று.

[42]உகார......பிண்டம் - மேற்கூறிய உகாரத்தின் மேலே மகாரமெட்டுவிரல் உயரமும் அகலமும் வியாபித்து ஒரு மாத்திரையையுடைத்தாய், அதற்கு அதிதேவதையான ஒப்பில்லாத உருத்திரமூர்த்தியையும் மின்னைப்போன்ற நிறத்தையும் மிருக யோனியையும் அந்தகாரதீபம் போன்ற மாயா மலத்தையு முடைத்தாய்ப் பிண்டத்தின்கண் விஷகலை விளங்கா நிற்கும் ; இதனை யறிந்து தியானிக்கில் உருத்திர லோகத்தை யடைவன்.

[43]தேயு...கலையே - தேயு தத்துவத்தில் அண்டத்தை யறியுமிடத்து இருபதுநூறுயிரகோடி யோசனை அகலமுயரமு முடைத்தாய் இதிற் பொருந்திய அண்டகடாக மூன்றுகோடி கனத்தையு முடைத்தாய் வித்தியா கலையைப் பொருந்தி நிற்கும் ; இப்பெயர் எக்காரணத்தாலென்னில் ஆசாரியரிடத்திற் கேட்டுவந்த பொருளைத் திரும்ப அறிவிப்பிக்கையால் வித்தியாகலை யெனப் பெயராயிற்று.

[44]மகாரத்...பிண்டம் - முற்கூறிய மகாரத்துக்கு மேலே ஒப்பில்லாத விந்து எட்டுவிர லுயரமும் அகலமும் வியாபித்து அரை மாத்திரையு முடைத்தாய் அதற்கதிதேவதையான மகேச்வரனைப் பொருந்தி, நன்றாய் எரிகின்ற விளக்கின் பிரகாசம்போன்ற நிறத்தையு

பி-ம்—*மேல் மிருகயோனிக்கு மென்னிறம். †அரையே ஒளியுந்.

மாயை மலமா மருவும் யோனி
ஆயும் பறவை யாகும் பிண்டந்[44]
தப்பி லாத வாயு வண்டம்
முப்பது நூறு யிரகோடி யோசனை
யகல முயர மாகு மென்ப*
ஏனுங் கனமொரு நாலு கோடி
சாந்தம் வாய்ந்த சாந்தி கலையே[45]
யர்த்த சந்திரன் மூன் றங் குலியே
வைத்த மாத்திரை கால்வா ளொளியா
மிவ்வகை யைந்து மெய்பெறு தூல[46]
நேய மான நிரோதிமூன் றங்குலி
ஆய மாத்திரை யரைக்கா னிறம்புகை
நண்ணும் யோனி நாற்கா லாகும்
எண்ணு மாயேய மலமென விசைப்பர்[47]

முடைத்தாய் மாயாமலத்தையும் விசாரிக்கப்பட்ட பறவை யோனியை யும் உடைத்தாய்ப் பிண்டத்தின்கண் விந்து கலை விளங்கா நிற்கும். இதனை யறிந்து தியானிக்கின் மஹேச்வர லோகத்தை யடைவன்.

[45] தப்பி...கலையே - தனது வியாப்திக்குக் குறைவின்றி யிருக்கிற வாயுவண்டம் முப்பது நூறுயிரகோடி யோசனை விரிவையு முயரத்தி னையு முடைத்தாய் இதிற் பொருந்திய அண்டகடாக வோட்டிற் கனம் நாலுகோடி யோசனையு முடைத்தாய் சாந்ததேவ நாயகனைப் பொருந்தி சாந்திகலை விளங்கா நிற்கும்; இப்பெய ரெக்காரணத்தா லென்னில் ஆன்மாக்களை...யும் விடுவிக்கப்படுகையாற் சாந்தி கலை யெனப் பெயராயிற்று.

[46] அர்த்த......தூலம் - முற்கூறிய விந்துகலைக்கு மேலே அர்த்த சந்திரகலை மூன்றங்குலத்தை யுடைத்தாய்க் கால் மாத்திரையும் பெற்று வாளியொளி போன்ற நிறத்தையுமுடைத்தாய் விளங்கா நிற்கும்; இவைகளைந்தும் பிண்டத்திற் காணப்பட்ட ஸ்தூலதரிசனம்.

[47] நேய......விசைப்பர் - முற்கூறிய அர்த்தசந்திர கலைக்கும் மேலே ஆன்மாக்களாலே அறியப்பட்ட நிரோதிகலை மூன்றங்குல அகலமுயரமும் உடைத்தாய் அரைக்கால் மாத்திரையுமாகித் தாமிரம் போன்ற நிறத்தையும், அதிற் பொருந்திய பசுமுதலிய நாற்கால் யோனியையுங்கருதப்படாநின்ற மாயையின் காரியமாகிய மலத்தையு முடைத்தாயிருக்குமென் றறிவாலுயர்ந்தோர் சொல்லுவரென அறிக;

---

* இவ்வடி சில பிரதிகளிற் காணப்படவில்லை. (தொடரும்)

திருப்பெருந்துறையில் அருளிய

அடைக்கலப்பத்து

பக்குவ நிர்ணயம்

கலவைப்பாட்டு

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன் அடைக்கலமே.

உரைநடை :—'உடையாய்' என்பதை முதலிற் கொள்க.

உரை :—என்னுடைய முதல்வனே, செழுமையாகிய தாமரை மலரின் செறிவுபோன்ற உன்னுடைய செவ்விய திருவடிகள் சேரப் பெற்றுத் தகுதியாயமைந்த, கனிந்த உள்ளத்தை உடைய அடியார் கள் உன்னோடு உடனே வீட்டிற்குச் சென்றனர். பாவியேனாகிய யான், புழுக்கள் தமக்கு இடமாகக்கொண்ட இழிவான உடம்பை யுடைய தீமை மிக்க கலைஞான மில்லாத அழுக்கு மனத்தேனாகிய அடியேன், உனக்கு அடைக்கலம்.

குறிப்பு :—அமைந்த = அமைதி பெற்ற. பழுத்த = அன்பினாற் கனிந்த. கண் = இடம். 'புழுக்கணுடை' என்பதைப் புழுக்கள் நுடை யெனப்பிரித்துப் புழுக்கள் நெளிந்த என்று பொருள் கொள்ளுதலு முண்டு. குரம்பை = கூடு; உடல். அழுக்கு = வாசனை மலம். ௧

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவனே அராப்பூண் பவனேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவனேநின் திருவரு ளால்என் பிறவியைவேர்
அறுப்பவனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை :—வெறுக்கத் தக்கனவே செய்யும் என்னுடைய இழி வினை, உன்னுடைய பெருந்தன்மையினாலே பொறுத்துக் கொள்

பவனே, பாம்பினை ஆபரணமாக அணிந்தவனே, மிகுந்துவருங் கங்கை வெள்ளத்தைச் சடையின்கண் அடக்குபவனே, உன்னுடைய திருவருளினாலே எனது பிறப்பின் மூலத்தைக்களைபவனே, முதல்வனே அடியேன் உனக்கு அடைக்கலம்.

குறிப்பு:—'பொங்குகங்கை' என்றதனால் கங்கை வெள்ளம் எனப் பட்டது. 'செறிப்பவனே' என்றது 'செறுப்பவனே' என்றாயிற்று. உ

பெரும்பெருமான் என்பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப்பெரு மான்என் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோன்நெடு மாலறி யாமல்நின்ற
அரும்பெருமான் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை:—எல்லாத்தேவர்களிலும் பெரியவனான தலைவனே, என் பிறப்பினை அடியோடுதொலைத்து,மிகுந்தபித்தினைத்தருந் தலைவனே, திறமையுடைய பெருமானே, என்னுள்ளத்தின் உள்ளீடாகத் தோன்றுகின்ற பெருமானே, பிரமனும் மாலும் தேடியுந் தெரியாத படி நின்ற கிடைத்தற்கரிய பரம்பொரு ளானவனே, முதல்வனே, அடியேன் உனக்கு அடைக்கலம்.

குறிப்பு :—பிச்சு = பித்து, மயக்கம் = பேரன்பு. சதுர் = திறமை, அதற்கு நான்கெனப் பொருள்கொண்டு, சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கினையும் வகுத்த பெருமான் எனக் கொள்ளுதலு முண்டு. ௩

பொழிகின்ற துன்பப் புயல்வெள் ளத்தில்நின் கழற்புணைகொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின்றனன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை :—முதல்வனே! துன்பமாகிய மேகம் பொழிகின்ற வெள்ளத்திலே உன்னுடைய திருவடியாகிய தெப்பத்தைத் துணையாகக் கொண்டு உன்னோடு இறங்கிவந்த அன்பர்கள் மேலுலகத்திற்கு ஏறி விட்டார்கள். யானோவெனில் துன்பக்கடற் சுழியிலகப்பட்டு, பெண்டிராகிய அலைகள்மோத, ஆசையாகிய சுறாமீன் தாக்க நசித்துப் போகின்றேன். அடியேன் உனக்கடைக்கலம்.

குறிப்பு :—இழிகின்ற = இறங்குகின்ற. இச்செய்யுளில் அது இறந்த காலப்பொருளில் வந்தது. வான் = சிதாகாசம். 'இடர்' என்பதைச் 'சுழி' என்பதனோடு சேர்த்துப் பொருள் கொள்ளுதலு முண்டு. இடராயிருப்பது உடம்பு. ௪

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறம்மறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரியாய் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை நடை:—'மைத்தடங்கண்...பெருமான் உடையாய்' என்பதை முதலிற் கொள்க.

உரை:--மைதீட்டிய விசாலமாகிய கண்ணின்கண் மகிழ்ச்சியுடைய மானின் பார்வைபோன்ற நோக்கினையுடைய உமையம்மையை ஒரு பாகமுடையவனே, வானோர்கள் தலைவனே, எனது முதல்வனே, சுருளுதலைச் செய்யுங் குழலினையுடைய பெண்களது சூழ்ச்சியிலகப் பட்டு உன் சிறப்பினை மறந்து இவ்வுலகிலே அறியாமையை வளர்க்கின்ற உடம்பிலே கிடந்து இளைத்தனன். திருவருள் புரிவாயாக. அடியேனுனக்கே அடைக்கலம்.

குறிப்பு:—'சுருள்' என்பது ஐவகை மயிர்முடியினொன்று, அவை களாவன: முடி, கொண்டை, பணிச்சை, சொருக்கு, சுருள். கூழை = தலைமயிர். சூழல் = சூழ்ச்சி, தந்திரம். இருள் = நிலை இல்லாதனவற்றை நிலையென்றுணரும் புல்லறிவு. மாயாகாரியமாகிய உடம்பானது அப்படிப்பட்ட திரிபுணர்ச்சியைவிளைக்கும். 'மைத்தடங்கண்' என்பதைக் 'கூழையர்' என்பதனோடுங் கூட்டலாம். வெருள் = மருட்கை, அச்சம். புரி = செய். ௫

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

உரைநடை:—'ஆழியப்பாவுடையாய்' என்பதை முதலிற்கொள்க.

உரை:—கருணைக்கடலாகிய அப்பனே, முதல்வனே, மாம்பிஞ்சின் பிளவைப் போன்றமை பரவிய கண்களை உடைய பெண்கள்பால், வலிய மத்தை இட்டபோது, உடைவுற்றுப் பானையின் பக்கமெங்கும் பரவுகின்ற தயிரினைப்போலத் தளர்ச்சியுற்றேன். உன்னுடைய பெருமைபொருந்திய தாமரை மலர்போன்ற திருவடிகள் வாழ்வன வாக. அவற்றைக் கொடிய வினையையுடைய யான் எப்பொழுது வந்தடைந்து எந்தக் காலத்திலே வணங்கப் போகிறேன்.

குறிப்பு:—மாழை=மாவடு; அழகு. தாழி=மிடா. ஆழி=கடல். தடர்மலத்தாள் துணையாகலின், வாழியென்றார். கண்ணியரால் தளர்ந்தேன் என்று வேற்றுமையுருபு விரித்துக்கொள்க. ௬

மின்கணினார் நுடங்கும்இடையார் வெகுளிவலையில் அகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை:—மின்போன்ற விழியை யுடையவர்களும், அசைகின்ற இடையை யுடையவர்களுமாகிய மங்கையரது கோபவலையிற் சிக்குண்டு துன்பமுடையவனாய் உழல்கின்ற என்னை அங்ஙனம் உழலாத வண்ணம் என்னுள்ளத்தே புகுந்து, என்னிடத்திலே ஞான அமுதமானது சுரந்து இன்பந்தரும்படியாகச் செய்து, எனது குற்றத்திற்கு இரங்கி,அவற்றைப் பொறுத்தருளு மழகிய கருணைக் கண்ணையுடையவனே, முதல்வனே உனக்கு அடைக்கலம்.

குறிப்பு:—மின்கண்=மின்னுகின்றகண் என்றலுமுண்டு. நுடங்குதல்=துவளுதல், அசைதல். ஆசையினால் மாதர் கோபப்பட்டும் அவர்களைவிட்டு நீங்க மனமிராது மயக்கமுறுதலால் வெகுளிவலையென்றார். என்கணிலே=என்னிடத்திலே. தித்தித்து=தித்திக்க. ௭

மாவடு வகிரன்ன கண்ணி பங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற்கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடுவேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை:—மாங்காய் வடுவின் பிளவுபோன்ற கண்ணை உடையவளாகிய உமைபாகனே, நீ உன் திருவடித்தாமரைக்கே என்னை அழைத்துக்கொள்வாயோ! அல்லது கும்பிபாகமென்னும் நரகத்திலிடுவாயோ! உன்னுடைய திருவுள்ளக்கருத்தை நான் அறியமாட்டேன். (கைக்கோளர்) நூலிழைப் பாப்பிலே அங்குமிங்கும் ஓடித்திரிகின்ற அவர்களது குழல்போல என்னுடைய உள்ளமானது உலகப்பற்றில் மறைந்து திரிவதாயிற்று. (உன்னிடம் மனங்குவியாமையால்) அந்தோ! கெட்டொழிவேன். முதல்வனே, அடியேன் உனக்கே அடைக்கலம்.

குறிப்பு:—வகிர்=பிளவு. அது வடிவத்தாற் கண்ணுக்கு உவமை.

பிறிவறியா அன்பர்நின் அருட்பெய் கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம்வந்து பெற்றார்உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன் நின்னையேஅறியும்
அறிவறியேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை:—முதல்வனே! நின்திருவருளை விட்டுப் பிரியவறியாத மெய்யடியார்கள் கழல்கள் நிரைத்த உனது இருதிருவடியின் கீழே மீட்டும் பிறவியில் திரும்புதலை யறியாத பேரின்பச் செல்வத்தைப் போயடைந்தனர். நான் உன்னை வழிபடுகின்ற ஒப்பற்ற வழியினை யறியமாட்டேன். பிறபொருளைக் கருதாது உன்னையே முழுவதும் அறியமாட்டேன். உன்னையே முழுவது மறிதற்கேதுவாகிய சிவ ஞானத்தையுந் தெரிந்திலேன். அடியேன் உனக்கு அடைக்கலம்.

குறிப்பு:—பிரிவு என்பது பிறிவென வலித்தது. நின்னருள் பிரிவறியா எனமாறிக் கொள்க. மறிவு என்பது பிறவிக்கு மீளுதல். அதனை மரித்தலின் விகாரமாகக் கொண்டு நசித்தலெனப் பொருள் கொள்ளுதலுமுண்டு. ௮

வழங்குகின் றாய்க்குன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு, விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்என் விதியின்மையால், தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளாய், அழுங்குகின்றேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை:—முதல்வனே, வீட்டினை யன்பர்க்கு வழங்குகின்ற உன் திருவருளாகிய கிடைத்தற்கரிய அமுதத்தை அள்ளி உட்கொண்டு விழுங்குங்காலத் தீவினையே னாகிய எனக்கு நல்ல ஊழின்மையால் தொண்டையில் தடைபடுதலாயினேன்; அருமையாகிய தேன்போன் றதான சலசலவென்று ஒலிக்கின்ற தண்ணீரைக் குடிப்பதற்குக் கொடுத்து, என்னைப் பிழைக்கும்படி செய்யவேண்டும். நான் அலந்து வருந்துகின்றேன். உனக்கே யடியேன் அடைக்கலம்.

குறிப்பு:— விக்குதல்=தொண்டையில் தடைபடுதல். விதி= நல்ல ஊழ். தழங்கு என்பதைத் தண்ணீரென்பதனோடு சேர்க்க. தண்ணீர் குளிர்ந்ததண்மையென்பாருமுளர். ஓடுகின்ற நீரினாலே விக்கல் நிற்றலால் தண்ணீர் 'பருகத்தந்து' என்றார். அழுங்கு=அலைதல்; வருந்துதல். ௧௦

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

ஆசைப்பத்து

ஆத்தும இலக்கணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கருடக் கொடியோன் காண மாட்டாக் கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை :—கருடனெழுதிய கொடியையுடைய திருமால் அறிய வொண்ணாத கழல்களணிந்த செவ்விய திருவடிகளாகிய அரிய செல்வத்தை இவ்வுலகத்தே எனக்குக் கொடுத்து எனையாட் கொண்ட தொளைக்கப்படாத மாணிக்கமே! எனதறியாமையை ஒட்டி இங்கே வாவென்று நீ என்னை வீட்டுலகத்திற்கு அழைக்குந் திருவருட் சிறப்பைப் பெறுதற்கு அம்மானே நான் ஆசைப்பட்டேன்.

குறிப்பு :—பொருள்=அருட் செல்வம். துரந்து=செலுத்தி, ஓட்டி; அங்கே என்றது வீட்டுலகத்தே. பொல்லா=உளி முதலியவற்றாற் செதுக்கப்படாத. ௧

மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன் கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம் என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை :—எலும்பு, மூளை என்பவற்றை நெருங்கிய பால்போன்ற வெள்ளிய நரம்புகளைக் கயிறாகக் கொண்டுகட்டி, தோலைக்கொண்டு மூடியசட்டைக்குள் புகுந்து அதில் தங்கியிருக்க இயலாதவன் யான். அரசனே ! என்னை விரைவாக அழைத்துக் கொள்வாயாக. எவ்வளவு

உயர்ந்த பதவியிலிருப்பவர்களுக்கும் அப்பாற்பட்ட கிடைத்தற்கரிய அருமருந்தே, அப்பனே, அழகிய பெரியோனே உன்னைக் காண்ப தற்கு விருப்பமுடையவனாயிருக்கிறேன்.

குறிப்பு :—மொய்=நெருங்கி ; பால் நரம்பு=வெள்ளை நரம்பு ; குப்பாயம்=சட்டை. கண்டாய் - அசை. ௨

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி
ஆவா என்ன ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை நடை—கோவே, கூத்தா........குரு மணியே அம்மானே, என்பதை முதலிற் கொள்க.

உரை :—அரசனே, திருநடமியற்றுவானே, (அடியேனைத்) தடுத்தாட் கொள்ளும் ஆசிரிய மாணிக்கமே. நிணம் வடிந்து, ஈக் களால் மொய்க்கப்பட்டு, அழுக்கு நிறைந்து அலைகின்ற சிறிய வீடா கிய இவ்வுடம்பு சிதைந்தொழியும்படி, என்னை அழைத்துக் கொள்ள மாட்டாயா. வானவனே, வானவர்க்கரியவனே, மங்கலப் பொருளா வானே, அழகிய பெரியோனே, சற்று நீ என் முகத்தைப் பார்த்து இரக்கக்குறிப்புக் காட்டுவதை விரும்பினேன்.

குறிப்பு :—'வார்ந்து' என்பது வார்த்து என்பதன் விகாரம். வார்த்து, வடித்து, ஊற்றி, ஒழுக்கி. வார்ந்து என்பதைத் தன்வினை யாகக் கொள்ளலாம். அழுக்கு=மலம். இது என்றது தமது உடம் பைக் குறித்து நின்றது. ஆவா=ஐயோ, நீவா, என்றிரக்கச் சொற் கூறுவது. குடியிருக்கும் வீடு, குடிலாயிற்றுப்போலும். காத்து - தடுத்து. ௩

மிடைந்தெலும் பூத்தைமிக் கழுக்கூறல் வீறிலி நடைக்
கூடந், தொடர்ந்தெனை நலியத் துயருறு கின்றேன் சோத்தம்
எம்பெருமானே, உடைந்து நைந்துருகி உன்னொளி நோக்கி
உன்திரு மலர்ப்பாதம், அடைந்து நின்றிடுவான் ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை நடை :—'எம்பெருமானே' என்பதை முதலிற் கொள்க.

உரை:—எமது தலைவனே, எலும்பு நெருங்கி ஊத்தை மிகுந்து அழுக்கு ஊறி நிற்பதாய்ச் சிறப்பற்ற நடைவீடாகிய இவ்வுடம்பு என்னைப்பற்றித் துன்புறுத்துவதால் நான் மனம் வருந்துகின்றேன். உனக்கு வணக்கம். அழகிய பெரியோனே, அன்பினால் உள்ள முடைந்து, (=செருக்கொழிந்து), மனங்கனிந் துருகி, உனது அருளொளியைப் பார்த்துச் சென்று, உனது திருவடிக் கமலங்களை விரைவில் எய்தி நிலை பெறுவதற்கு அவாமிக்குடையேன்.

குறிப்பு :—எலும்பு மிடைந்து எனமாறுக. வீறு=சிறப்பு. கூடம்=வீடு. சோத்தம்=அஞ்சலி. ௪

அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி அடியே னுடை
யாக்கை, புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும் விடை
யாய் பொடியாடீ, எளிவந் தென்னை ஆண்டு கொண்ட என்னா
ரமுதேயோ, அளியேன் என்ன ஆசைப் பட்டேன் கண்டாய்
அம்மானே.

உரை நடை :—விடையாய், பொடியாடீ, ஆரமுதே, அம்மானே என்னும் விளித்தொடர்களை முதலிற் கொள்க. முதலடியில், அகத்து அளிபுண் எனமாறுக.

உரை:—காளையூர்தியனே, திருநீறணிந்தவனே, எளிதாகத் தோன்றியருளி என்னை யாட்கொண்ட அருமருந்தே, அழகிய பெரி யோனே, ஒலம், உட்பக்கம் நெருங்கிய புண்ணுடையதாய்ப் புறத்தே தோலால் மூடப்பெற்ற, அடியேனுடைய உடம்பின்கண் புளியம் பழம் போலப் பற்றற்று இருந்தாலும், (அதன் தொடர்பு அறவே விடப்பெறாமையால்) இரங்கத் தக்கவன் என்று என்னை நீ கருதி யருள ஆசைப்பட்டேன்.

குறிப்பு:—அளி=நெருங்குதல். மூடிய அடியேன், என்பது மூடியடியேன் என அகரந் தொக நின்றது. பொடி=பூதி, நீறு. புளியம்பழமானது, அதன் ஓட்டினுள், ஓட்டிற்கு வேறாக இருத் தல் யாருமறிந்ததே. அதுபோல, ஞானிகள் பற்றற்றிருப்பர். அடி கள் அனையரென்பதற்கு இச்செய்யுள் அகச்சான்றாதல் காண்க. அளியேன்=இரங்கத்தக்கேன். ௫

எய்த்தேன் நாயேன் இனியிங்கிருக்ககில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகவொளி நோக்கி முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை நடை:—'வானோர்......சேவடியானே' என்பதை முதலிற் கொள்க.

உரை :—விண்ணவரும் அறியாத திருவடித் தாமரையுடையானே; நாயனைய யான், (உடம்பைச் சுமந்து) இளைத்துப்போனேன். இனிமேல் இந்நிலவுலகத்திலே தரிக்கமாட்டேன். இவ்வுலக வாழ்க்கையை எனக்கு நியமித்தாய், நீ இதனை நீக்கி விடுவாயாக. இயல்பாகப் பாசங்களின் நீங்கியவனே, உன்னுடைய திருமுகத்தின் அருளொளியைக்கண்டு, உனது புன் சிரிப்பினைப் பார்ப்பதற்கு அப்பனே, அழகிய பெரியோனே மிகவும் அவாவுற்றேன்.

குறிப்பு :—வாங்காய்=ஒடுக்குவாய். எடுப்பாய். முத்தா என்பதற்கு முத்தி தருவோனே யென்றுங் கூறுவதுண்டு. ௬

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும் பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா வுலகந் தந்து வந்தாட் கொள்வோனே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம் பெருமான் எனஏத்த
ஆரா அமுதே ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை:—மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் வாழ்த்தி வணங்கும் மேலோனே, மேலான ஒளியானவனே, மீண்டு வருதலில்லாத வீட்டுலகைக் கொடுத்து என்னை ஆண்டருள்பவனே, வந்தருள்வாயாக. (உன் திருமேனியைக் கண்டு) உனது ஆயிரந் திருப்பெயருஞ் சொல்லி அலைந்து எமது தலைவனே என்று வாழ்த்துவதற்கு, தெவிட்டாத அருமருந்தே, அழகிய பெரியோனே, நான் அவாவுற்றேன்.

குறிப்பு :—திரிந்து, என்பதை ஆனந்தக் கூத்தாடி என்றும் பொருள் கொள்ளலாம். ஆரா=நிறையாத, தெவிட்டாத. ௭

கையால் தொழுதுன் கழற்சே வடிகள் கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் தலைமேல்வைத் தெம்பெருமான் பெருமானென்
றையா என்றன் வாயா லரற்றி அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை நடை :—ஐயாற்றரசே, அம்மானே என்பவற்றை முதலிற் கொள்க.

உரை :—திருவையாறமர்ந்த கோவே, அழகிய பெரியோனே, உனது வீரக்கழலணிந்த செவ்விய திருவடிகளைக் கையினாலே வணங்கி, முழுவதும் பற்றி, இடைவிடாது எனது சிரமேற்கொண்டு எமது தலைவனே, எமது தலைவனே, ஐயனே, ஐயனே, என்று வாயாரக் கூவி வாழ்த்தி அனலிடைப்பட்ட மெழுகு போல உருகுவதற்கு ஆசைப்பட்டேன்.

குறிப்பு :—கழும=பூரணமாக. கழுமல்=நிறைதல். எய்யாது=சலியாது; இடைவிடாது. ௮

செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டேன் கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேஉன் பழஅடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை நடை :—படிதானில்லாப் பரம்பரனே, அம்மானே, என்பவற்றை முதலிற்கொள்க.

உரை:—குணம் யாதுமில்லாத (ஒப்பற்ற) மிக்கமேலோனே, குற்றம் நிறைந்த இவ்வுடம்பின் வகையனைத்துந் தொலைத்து, சிவமாநகரத்துட் புகுந்து, காவல்பொருந்திய அருளொளிக் காட்சியடைந்து, எனது இருகண்ணும் மகிழ்ச்சி மீதூரும்படி, உனது பழைய அன்பர் திருக்கூட்டத்தை அடியேன் காண்பதற்கு ஆசைப்பட்டேன்.

குறிப்பு:—படி=குணம், ஒப்பு.'குணங்கள் தாமில்லா இன்பமே' என்றதுங் காண்க. கடி=காவல், மணம். செடி=குற்றம். பரம்பரனே=மேலானவற்றிற்கு மேலோனே, இறைவன் ஒருவனே ஒப்பற்றவனாதலின், 'படிதான் இல்லா' என்றார். ௯

வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை நடை :—பஞ்சேரடியாள் பாகத்தொருவா, அம்மானே, ஞானச்சுடரே, என்பவற்றை முதலிற் கொள்க.

உரை :—செம்பஞ்சூட்டிய, (அல்லது பஞ்சுபோல் மெல்லிய) அழகிய திருவடிகளுடைய உமையம்மை பங்கனாகிய ஒப்பற்றவனே, அழகிய மேலோனே, அறிவுப்பிழம்பே, விருப்பத்தைத் தருகின்ற (அழகிய) சேல்மீன்போன்ற கண்களையுடைய மாதரது கோபவலையிற் சிக்குண்டு சிதைவுற்றேனாகிய நான், (நின்னைத்தவிர வேறு) யாதொரு துணையுமில்லாதேன், உனது பவளம் போன்ற அழகிய திருவாயால், அஞ்சாதே என்று சொல்வதை விரும்பினேன்.

குறிப்பு :—வெம்=விரும்பத்தக்க. அதனைச் சேலோடுங் கண்ணோடுங் கூட்டலாம். பஞ்சேர்=பஞ்சு+ஏர். பஞ்சுபோன்ற, அழகிய. ௧௦

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

அதிசயப்பத்து

முத்தி இலக்கணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வைப்புமா டென்றும் மாணிக்கத் தொளியென்றும்
மனத்திடை உருகாதே, செப்புநேர்முலை மடவர லியர்தங்
கள் திறத்திடை நைவேனை, ஒப்பி லாதன உவமனி லிறந்தன
ஒண்மலர்த் திருப்பாதத், தப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்
டிய அதிசயங் கண்டாமே.

உரை :—இறைவனே, தேடிவைத்த செல்வமென்றும் மாணிக்கத்தின் ஒளியென்றும் உள்ளத்திலே உருக்கங் கொள்ளாமல், செப்புப் போன்ற நகிலையுடைய இளம்பெண்டிர்கள் வகையிற் கனிபவனாகிய என்னை யாதொரு பொருளுக்கும் நிகரில்லாதனவாய், உவமை கூறக் கூடியபொருள்கள் யாவற்றையுங் கடந்தனவாய், உள்ளஒள்ளிய திருவடித் தாமரையுடைய தந்தை ஆட்கொண்டு தனது மெய்யடியாருடன் சேர்ப்பித்த வியப்பான செய்கையை நாம் அறிந்தோம்.

குறிப்பு :—வைப்பு=எய்த்த காலத்துப் பயன் படுவதற்காகச் சேமித்து வைத்திருப்பது; மாடு=செல்வம்; வைப்பு என்பதற்கு இடமெனப் பொருள் கொள்வாருமுளர். இடருற்ற காலை பயன்படுதலால், 'வைப்புமா' டென்றார். நிலைத்த இன்பந் தருதலால் 'மாணிக்கத்து ஒளி' என்றார். செப்பு=குங்குமம் முதலியன வைக்கிற சிமிழ். பெருமையால் ஒப்பிலாதன என்றார். தன்மையால் உவமனில் இறந்தன வென்றார். உவமன்=உவமம். உவமையில்லாது கடந்த என்றுங் கொள்க. ௧

நீதி யாவன யாவையும் நினைக்கிலேன் நினைப்பவ
ரொடுங்கூடேன், ஏதமேபிறந் திறந்துழல் வேன்தனை என்

னடி யானென்று, பாதி மாதொடுங் கூடிய பரம்பரன் நிரந்
தர மாய்நின்ற, ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதி
சயங் கண்டாமே.

உரை :—நியாயமாயுள்ள எவற்றையும் எண்ண மாட்டேன். அவற்றை எண்ணி நடப்பவரோடும் நான் சேரமாட்டேன். குற்றவடிவாகவே, பிறந்தும் இறந்துந் துன்புறுகிற என்னை, தன்னுடைய அடியவனென்று கருதித் திருமேனியிற் பாதி பெண்ணொடுங் கூடிய மிகமேலோனாய் அழிவின்றி நின்ற ஆதி முதல்வன் ஆட்கொண்டு தன்னடியார்களுட் சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

குறிப்பு :—ஏதம்=குற்றம். ஏதமே=ஏதமேயாய்=குற்றத்தின் வடிவமேயாய் ; வீணே என்றும் பொருள் கொள்ப. உழல்வேன்= அலைந்து துன்புறுவேன். நிரந்தரமாய்=நித்தியமாய். ௨

முன்னை என்னுடை வல்வினை போயிட முக்கண துடை
யெந்தை, தன்னை யாவரும் அறிவதற் கரியவன் எளியவன்
அடியார்க்குப், பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில்
இளமதி யதுவைத்த, அன்னை ஆண்டுதன் அடியரிற் கூட்
டிய அதிசயங் கண்டாமே.

உரை நடை :—முன்னை யென்னுடைய வல்வினை போயிட என்பதை ஆண்டு என்பதனோடு முடிக்க.

உரை :—மூன்று கண்ணையுடைய எமது அப்பன், தனக்குத் தானே தலைமையானவன், யாருமறிய வொண்ணாதவன், அன்பர்க்கு எளியனாய் விளங்குபவன், பொன்னினொளியினும் மேம்பட்ட ஒப்பற்றதாயமைந்த சடையினாலாகிய முடிமீது பிறையினை வைத்தருளிய தாய்போன்ற அவன், பக்குவம்வரு முன்னே என்னுடைய கொடிய வினைகள் அகன்றொழியும்படி என்னை ஆட்கொண்டருளித் தனதடியாருட் சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

குறிப்பு :—முன்னை=முன்னுகை. இதனை வல்வினை என்பதனோடு சேர்த்துப் பழமையாகிய வினையென்பாரு முளர். போயிட= விரைவிலொழிய. வினைக்கு ஆட்பட்டிருந்ததனால் 'உடைவல்வினை' என்றார். தன்+ஐ=தன் தலைவன். இதனை 'யறிவதற்கு' என்பதனோடு சேர்த்துத் தன்னை யறிவதற் கரியவன் என்று முரைப்பர். புரி சடை=கட்டிய சடை. சடையின் பிரிவுகளைப் 'புரி' என்றலுமுண்டு.

பித்த னென்(று)எனை உலகவர் பகர்வதோர் காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும் உபாயம தறியாமே
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற் கொருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

உரை :—உலகத்தவர்கள் என்னைப் பித்தம் பிடித்தவனென்று சொல்லுவதற்குக் காரணமிது கேட்பீர்களாக. இறைவனது திருவருளோடு மனமொத்து நடந்து அதனை விரைவி லெய்துகின்ற தந்திரத்தைத் தெரியாமல் இறந்து தாண்டுதற்கரிய. நரகத்தினிடை வீழ்வதற்கு இசைகின்ற என்னை அப்பன் ஆட்கொண்டு தன்னடியார் கூட்டத்திற் சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோம். (அறிந்து திகைத்தாற் போல் நின்றோம்).

குறிப்பு :—திகில் பிடித்தாற்போல் நிற்பவனை உலகினர் பித்தனென்று இகழ்கின்ற மரபுபற்றி இச்செய்யுளியற்றினர். 2-ம் அடியில் தன் என்பது அத்தனைக் குறிக்கும். அருநரகு பொருத்தற்கரிய துன்புடைய நரகுஎன்பாரு முளர். ஒருப்படுகின்றேன்=ஒருப்படுமியல்புடைய என்னை. ௪

பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன் பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று குடிகெடு கின்றேனை
இரவு நின்றெரி யாடிய எம்மிறை எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

உரை :—இறைவனைத் துதிப்பவர்களிடத்தே சென்று சேரமாட்டேன். பலவகையான பூக்களைப் பறித்து இறைவன் மீது தூவி வணங்கேன். குரவமலரணிந்த நீண்ட கூந்தலையுடைய மாதர் சார்பிலே நின்று பிழைப்புக்குக் கேடு தேடுகின்ற என்னை, எல்லாம் ஒடுங்குகின்ற சங்காரகாலமாகிய இரவிலே தான் ஒருவனேயாய் நின்று சோதி மயமாய்க் கூத்தியற்றுகின்ற எமது தலைவன், செந்தீப்

போன்ற சடையின்கண் மின்னுகின்ற பாம்பினை யுடையவனாகிய பெருமான் ஆட்கொண்டு தனதடியாருடன் சேர்ப்பித்த வியப்பினை அறிந்தோமே.

குறிப்பு :—பாடு=இடம், குணம், பெருமை. பன்மலர்=நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ. கோட்டுப்பூ என்பன. குரவ=ஒருவகை வாசனையுள்ள மரம். வார்=நீண்ட. எரியாடிய=ஊழித்தீயி லாடிய என்பது முண்டு. எரிசடை=ஒளிர்கின்ற சடை என்றலுமுண்டு. ௫

எண்ணி லேன்திரு நாமஅஞ் செழுத்தும்என் ஏழைமை யதனாலே, நண்ணி லேன்கலை ஞானிகள் தம்மொடு நல்வினை நயவாதே, மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற் கொருப்படு கின்றேனை, அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

உரை :—என்னுடைய அறியாமையினாலே இறைவனுடைய திருப்பேராகிய திருவைந் தெழுத்தினை நினைந்திலேன். அருட்கலை வல்ல அறிஞரோடு சேர்ந்திலேன். நற்செயல்களை விரும்பாது இம் மண்ணுலகிற் பிறந்து, இறந்து மண்ணாய்ப் போவதற்கு இயைபுடைய என்னைச் சிறப்பு மிகுந்த பெருமான் ஆட்கொண்டருளித் தன்னடியார்களோடு சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

குறிப்பு :—வாசனாமலம் நீங்குவதற்குத் திருவைந் தெழுத்தை நினைதல் சிவஞானபோதம் 9-ம் சூத்திரத்திற் கூறியதைக் காண்க. பிரணவத்தை ஐந்தெழுத் தெனலுமுண்டு. ஏழைமை=யறியாமை. நல்வினை=நற்செயல். இது இருவினைகளுட்சேர்ந்த நல்வினையன்று. அது பயன்கருதிச் செய்யப்படுவது. பயன் கருதாத நற்றவமே ஈண்டு குறிக்கப்பெற்றது. இறந்தவுடன் உடம்பானது மண் முதலிய ஐம்பூதத்திற் கலத்தலால் 'மண்ணாவதற்கு' என்றார். ௬

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய பொய்க்கூரை, இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை, முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி, அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

மேனிகொண் டெழுந்தருளிவந்து (என்னுடைய பிறவி நோய்க்கீடாக உபாயமாகவே அவனே சங்காரங்களினாலே பேதித்து) அடிமைகொள்ளும் பொருட்டாக இப்படி அருளிச்செய்ததொழிந்து, வாக்குமனாதீத கோசரமாயுள்ள சிவன் ஆன்மா வாவனோ? ௪

இப்படிப்பட்ட இவன் திருமேனிகொண்டு இரக்ஷிக்க வேண்டுமோ தானே இரக்ஷிக்கமாட்டானோ வென்ற மாணவகனை நோக்கி அருளிச்செய்கின்றார் :

ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்க ளெங்கே உணர்வெங்கே—பாகத்து
அருள்வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

(உரை) ஆகமங்கள்.........பேசு - எனக்கு அநாதியே தொடங்கி விடியாமல் நின்ற பேரந்தகாரமான ஆணவமலம் பக்குவப்பட்டபடி யறிந்து, பரமேச்சுரன் தன்னுடைய அருளாலே திருமேனிகொண்டெழுந்தருளிவந்து, என்னுடைய மலமாயை கன்மங்களையும் விடுத்து, என்னையும் என்னுடைய சுதந்திரஹீனத்தையும் அறிவித்து, தன்னுடைய அடிமையாகக் கொண்டு ரூப சொரூபங்களையும் எனக்கேற்பத் தெளிவித்து, தன்னுடைய பரமாநந்த போகத்திலே என்னைத் திருத்தியடைவித்து ஆண்டிலனாகில், அவனுடைய எல்லைப்படாத சொரூபத்தை அறியவல்லார் யார்? அதனை அநாதியே சொல்லப்பட்ட ஆகமங்களும், அவற்றிலே வகுப்புண்ட ஆறு சமயங்களும் அந்தச் சமயங்களில் முடிந்த பொருளின் யோகங்களும், இவற்றை அறியத்தக்க விவேக ஞானங்களும் என் செய்யவற்று? இதனை விசாரித்துச் சொல்லாய். ௫

ஆனால், சாத்திரத்தாற் பிரயோசனம் ஒன்றுமில்லையோ வென்ற மாணவகனை நோக்கி அருளிச்செய்கின்றார் :

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே—ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு.

(உரை) சாத்திரத்தை.........வந்துறுமே - உபதேச மின்றியே சாத்திரமாத்திரமே ஓதினால், திருமேனிகொண் டெழுந்தருளி வந்து

ஞானாசாரியன் கருணையாலே உபதேசிக்கத்தக்க சத்தான வார்த்தையிலே உண்டாகும் பெரிய பிரயோசனம் உண்டாகமாட்டாது. அதென்போல வெனில்?—ஆர்த்த..........செப்பு - ஆரவாரத்தையுடைய கடலினீர் பெரிதென்று மிகக் குடித்தாலும் சற்றுந் தாகந் தணியாது. (அக்கடலில் நீர் மேகத்தின் கைப்பட்டு வந்தபொழுதே குறைந்த சலத்திலே மிகுந்த தாகந் தணியாநிற்கும்; அதுபோலச் சாத்திரமுங் குருமுகத்தாலே பெற்றா லொழிந்து பிரயோசனமாகாது.)—தெளிந்த நீர்மையினை யுடையாய்! இதிலே சந்தேகமுண்டாயிற் சொல். ௬

ஆசாரியனும் எம்மைப்போல ஒருடம்பிலே நின்றதற்குத் தக்க கிருத்தியங்கள் செய்து நிற்கும்போதும், ஆன்மாக்களுடைய மலங்களைப் போக்கிச் சுத்த ஞானத்தைப் பிரகாசிப்பிக்கவல்ல சாமர்த்தியத்தையுடையனோவென்று ஐயப்பட்ட மாணவகனை நோக்கி, இதனை இன்னமும் விளங்க அருளிச் செய்கின்றார்:

இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்
நின்ற மலமனைத்தும் நீக்குவதிங்—கென்றால்
உருவுடையான் அன்றே உருவழியப் பாயும்
உருவருள வல்லான் உரை.

(உரை) இவ்வுலகில் நின்றமலம் அனைத்தும் இன்று பசுவின் மலமன்றே நீக்குவது இங்கு - இந்த உலகத்தில் எல்லா மலங்களும் இப்பொழுது பசுவின் மலத்தாலன்றோ போக்கப்பட்டன—என்றால் உரு அழியப் பாயும் உரு அருள வல்லான் உருவுடையானன்றே உரை - ஆனால் அநாதியே கூடிப் போகின்ற தேகாதிகளானவை பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இல்லையாய் விடும்படி, பொருந்தப்பட்ட சுத்த ரூபமான ஞானத்தைப் பிரகாசிப்பிக்கவல்ல சாமர்த்தியன், திருமேனி கொண்டெழுந்தருளி வந்த ஆசாரியனன்றி வேறொருவர் உண்டோ சொல். ௭

இப்படிப்பட்ட ஞானாசாரியன் பிரசாதத்தைப் பெற்றவர்கள் பெருமை அருளிச் செய்கின்றார்:

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவரே
அண்டத்தின் அப்புறத்த தென்னாதே—அண்டத்தின்

அப்புறமும் இப்புறமும் ஆரறிவுஞ் சென்றறியும்
எப்புறமும் கண்டவர்கள் இன்று.

(உரை) கண்டத்தைக்கொண்டு கருமம் முடித்தவரே-அநாதியே பூரணனாய்த் தோன்றாமல் நின்ற சிவன், காருண்ணியத்தினாலே நம்மைப் போலே எழுந்தருளி வந்த ஆசாரிய மூர்த்தியையும், அவனாலே இது நான் அன்றா யிருந்ததென்று கண்ட தன்னுடைய உடம்பையும், இந்த உடம்பை வேறென்றறிவிக்க அறிந்த தன்னையும் ஆகப் பதி - பாச - பசுவென்று சொல்லப்பட்ட இந்த மூன்று பொருள்களையுங் கண்டு உட்கொண்டு, இதனாலே கன்மத்தை முடித்தவர்களே. (இதனாற் கன்மத்தை முடித்தபடி எங்ஙனமெனின், கன்மமானது சஞ்சிதமென்றும், பிராரத்தமென்றும், ஆகாமியமென்றும் மூன்று வகைப்பட்டிருக்கையால், இவற்றை ஆசாரியன் செய்யுந் தீக்கையிலே அத்துவ சோதனை பண்ணுகையினாலே சஞ்சிதமான கன்மத்தையும், தேக முள்ள வளவும் பிராரத்த முண்டாகையால் இந்தத் தேகத்துடனே கூடப் பிராரத்தமான கன்மத்தையும், அவனருளிச் செய்த உபாயத்திலேதான் நின்று ஆகாமியகன்ம மேறாமலும் போக்கினபடியா மென்க.)—அண்டத்தின் அப்புறத்தது என்னாதே - அந்த ஞான சொரூபத்தை அண்டத்துக்குள்ளே யென்றும் புறம்பே யென்றுங் கொள்ளாமல்,—அண்டத்தின் அப்புறமும் இப்புறமும் ஆரறிவும் சென்று அறியும் - அந்த ஞானம் தத்துவாதீதமா யிருக்கின்ற முறைமையும், அந்தத் தத்துவங்களுக்குத் தத்துவமாய் நிற்கு முறைமையும், ஆன்மாக்களுக்கான்மாவாய் நிற்கு முறைமையும் உணர்ந்து, தாமும் இந்தப் பரிபூரணமான ஞானமேயாய் நிற்கவே, அவர்களுக்கு இந்த ஞானத்தின் ஐக்கியத்தாலே இப்படி யானேமென்கிற கருத்துமழியாமல் நிற்கும் அப்பொழுதே அவர்கள் சிவமாயே நிற்பர்கள்.—இன்று எப்புறமும் கண்டவர்கள் - அவர்களே இப்பொழுது எல்லாப் பொருள்களையும் உணர்ந்து பரிபூரணமாய் நிற்கின்ற கலியாணர்கள். ௮

அந்தச் சிவசொரூபந்தான் எப்படி யிருக்குமென்ற மாணவகனை நோக்கி அருளிச் செய்கின்றார்:

அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனாகிச்
சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றதிலை—இன்றிதனை

எவ்வா றிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்த ததுு.

(உரை) அன்று முதல்...இலை - அநாதியே தொடங்கி ஈசுவரனுடைய ஏவலினாலே சிருஷ்டி திதிகளுக்குக் கர்த்தாக்களாய்ப் பின்பு சங்கார காலத்திலே ஈசுவரனிடத்திலே கூடத்தக்க பிரம விஷ்ணுக்களும் அவனுடைய உண்மையான சுக ரூபம் இப்படியிருக்குமென்று இன்றளவுந் தெரிந்ததில்லை,—இதனை இன்று எவ்வாறு இருந்ததென்று எவ்வண்ணம் சொல்லுகேன் அது அவ்வாறு இருந்தது - அவர்களாலும் அறிதற்கரிய இந்தப் பொருளை இப்பொழுது எப்படி யிருக்குமென்று எதனை உவமித்துச் சொல்லுவேன். அந்தப் பொருள் யாவர் சிலர் கூடி அநுபவித்தவர்களுக்கு எப்படி யிருந்ததோ அப்படியே யிருக்கும். ௯

இன்னமும் இதனை விளங்க அருளிச் செய்கின்றார் :

ஒன்றும் குறியே குறியாத லால்அதனுக்
கொன்றுங் குறியொன்றி லாமையினால்—ஒன்றோடு
உவமிக்க லாவதுவுந் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று.

(உரை) ஒன்றும் - சான்று. இந்தப் பொருளுக்கு அநாதியே தொடங்கித் தான் பிரிந்து நில்லாமல் அதுவதுவாய் நிற்கின்றதே அடையாளமாதலால், இது வொழிந்து, அந்தப் பொருளுக்கு வேறோரடையாளமும் இல்லை. ஆகையாலே, ஒரு பொருளுடன் உவமித்துச் சொல்வதற்கு இதற் கொப்பானது ஒரு பொருளுமில்லை; ஆதலால், இப்பொருள் அநாதியே இரண்டற நிற்கு முறைமைபோல, இடையறாதே இரண்டற நிற்குஞ் சிவாநுபவத்தையுடைய சிவயோகிகளே இதற்குச் சாக்ஷி. ௧௦

இப்படிப்பட்ட ஞாதாக்களுக்குப் பிராரத்தத்தாலே தேகமுள்ளளவும் இந்திரியாதிகள் சீவியாவோ? இவர்கள் இடைவிடாமற் சிவனை அநுபவிக்கின்றபடி எப்படி என்ற மாணவகனை நோக்கி அருளிச் செய்கின்றார் :

ஆற்றால் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை
மாற்றிஅவ் வாற்றான் மறித்தாற்போல்—தோற்றிப்
புலன்களெனப் போதம் புறம்பொழியும் நந்தம்
மலங்களற மாற்றுவிக்கும் வந்து.

(உரை) ஆற்றால்...மறித்தாற்போல் - ஆற்றாலே சென்று அலையையுடைய கடலிலே கூடிய நன்னீர், கடல் நீருடனே ஒன்றாய்த் தன்றன்மை கெட்டு மீண்டும் அந்த ஆற்றாலே நெடுந்தூரம் எதிர்த்தாலும், முன்புபோல நன்னீராகாமல் அந்த உப்பு நீரே யானாற்போல,—தோற்றிப் புலன்களெனப் போதம் புறம்பு ஒழியும் - ஞானத்தாலே சிவனைக்கூடிச் சிவமாயிருக்கிற சிவயோகிகளுக்குப் பிராரத்தத்தாலே அநுபூதி திரிந்தாலும், கண்டவர்களுக்கு இந்திரியங்கள் சீவிப்பதுபோலத் தோன்றி, அவர்களுக்குச் சுகரூபத்தின் ஐக்கியத்தாலே பசுகரணங் கூடாமல் சிவகரணமே பிரகாசியா நிற்கும்.—வந்து நந்தம் மலங்கள் அறமாற்று விக்கும் - இவ்வளவேயன்றியும், தரிசனமாத்திரத்தாலே அவர்கள் கருணையானது போந்து நம்முடைய மலங்கள் நில்லாதபடியும் போக்கி நம்மையும் இரக்ஷியா நிற்கும். ௧௧

இதற்குப் பிரமாணமுண்டோவென்னில்? சிவகரணம் பிரகாசித்த சிவஞானிகளிடத்திலே விளைந்த விசேஷங்களை ஒரு செய்யுளிலே பல பிரமாணங்களால் அருளிச் செய்கின்றார் :

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனைஅன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தங்
கரணம்போல் அல்லாமை காண்.

(உரை) பாலை...காண் - சிவனுடை யருளாலே சிவனைப்பெற்ற நாயன்மார் பாலை நிலம் நெய்தல் நிலமாகப் பாடியதும், பாம்பு கடித்து மரித்தவன் பிராணன் பெற்றெழுந்திருக்கும்படி பாடியதும், பக்குவத்திலே காலனையேவி முதலை பிடித்து மரித்த புதல்வனைக் காலத்தைப் போக்கி அழைப்பித்ததுவும் மாணவகனே? அவர்களுக்கு நம்மைப்போலப் பசு கரணமாகச் சீவியாமல் சிவகரணமாகவே இருத்தலால் காண். ௧௨

இந்த வர்த்தம் பெற்றவர்களெல்லார்க்கும் இப்படி விசேஷஞ் செய்யுமோ என்ற மாணவகனை நோக்கி, மிகுத்த சத்திநிபாத முடையவர்க்கே இவையுண்டாமென்று அருளிச் செய்கின்றார் :

தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
தாங்களே சட்ட உறங்குவார்கள்—ஆங்கதுபோல்
ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதற்பின் அப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார்.

(உரை) தூங்கினரை...பார் - சுகதுக்க வேதனைகளிலே மிகவு மொத்துண்டாருக்கு அறி கருவிகள் நீங்கி மயக்கம் வந்தடுத்த காலத்தில், அன்பிலன்புடையவர்கள் நன்றாகப் படுத்த சயனத்திலே, அவர்கள் கூட்டியபின், தம்மையும் பிரபஞ்சத்தையும் மறக்கத்தக்க பேருறக்கம் அவர்கள் கூட்டவேண்டுவதின்றியே தம்மிடத்திலே அதுதானே உண்டாகா நிற்கும். அந்த முறைமைபோலச், சரியை கிரியாயோகங்களின் முற்றுதலாலே மிகுந்த சத்திநிபாதமுண்டாயவர்கள் அந்த மூன்று பாதங்களையும் நிகழ்த்திப் பிரபஞ்சத்தையும் விட்டு ஞானத்திலே அபேக்ஷையுடையராய், எம்மை இரக்ஷிக்கைக்கு ஞானசாரியனை எங்கே பெறுவேமென்று மிக்க தேட்டத்துடனே சென்றடைய, அவர் மீது ஆசாரியனும் மிகுந்த அன்பை வைத்து, ஞான தீக்ஷாக் கிரமங்களிலே மலமாயை கன்மங்களைப்போக்கி, ஆன்மாவினுண்மையை உணர்த்தி, இவருடைய சுதந்திரஹீனத்தையுங் காட்டி, ஞானத்தையுந் தரிசிப்பித்து, இதிலே ஒரு தன்மையாக்கிய பின், அந்த ஞானத்தின் ஐக்கியத்தாலே தம்மையும் பிரபஞ்சத்தையு மறப்பிப்பதான அந்தச் சிவ சொரூபந்தானே பிரகாசித்து ஒருநீர்மையாகவே அவருக்கு எல்லா விசேஷங்களும் விளையா நிற்கும்.—(ஆதலால் மாணவகனே!) நீயும் இப்படி இந்தத் திருஷ்டியிலே நிற்பாயாக.
௧௩

இனி இந்த அவசரத்திலே இவன் நிலைநிற்கும்படியை இன்னமும் விளங்க அருளிச் செய்கின்றார் :

உள்ள முதலனைத்தும் ஒன்ற உருகவரில்
உள்ளம் உருகவந் துன்னுடனும்—தெள்ளி
உணருமவர் தாங்கள் உளராக என்றும்
புணரவர நில்லா பொருள்.

(உரை) உள்ள...உன்னுடனும்-(மாணவகனே !) ஆன்மாவுக்குப் பிரபஞ்ச ஏதுவாயுள்ள தத்துவங்களும் மலங்களுமாயுள்ளவை கடாக்ஷத்தாலே ஒரு வழிப்பட இல்லையாய் விடும்படி ஞானம் பிரகாசிக்கில், அந்த ஞானத்தின் ஐக்கியத்தாலே இப்படிப் பெற்றோமென்கிற உன்னுடைய கருத்தானது அழியும்படி அப்பொழுதே சிவம் பிரகாசித்து, உன்னை ஒரு நீர்மையாக்கிக் கொள்ளா நிற்கும்.—தெள்ளி... பொருள் - இப்படி யொழிந்து, சிவனைத் தெளிந்தறிய விசாரிக்குமவர்கள், தங்கள் பாவனை குலையாது நிற்கச் சிறிதே அறிந்துகூட விசாரிக்கில், அவர்களுக்கு எப்பொழுதும் பொருந்துகைக்கு முன்னில்லாது அந்தப் பொருள்.
௧௪

இந்தப் பதினன்கு திருவெண்பாக்களும் உபதேசத்தின் முறைமையாகையால், இதற்குப் பிரமாணமாகத் திவ்வியாகமங்களைத் தம்பிரானார் அருளிச்செய்த அடைவே ஆன்மாக்களுக்கு அநாதியாக வருகிற ஜநநமரணங்களுஞ் சுகதுக்கங்களும் ஞானத்தாலல்லது போகாதாகையால், இந்த ஞானமுண்டாகும் பொருட்டுப் பக்குவங்களுக்கீடாக ஆசாரியர் கடாக்ஷத்தாலே சரியைகிரியாயோகங்களைச்செய்து, இவற்றின் முற்றுதலாலே ஞானசாரியனை வழிபட்டு, ஞானோபதேசத்தைப் பெற்று, ஞானத்தின் ஐக்கியத்தாலே சிவனைப்பெற்று முத்தராம்படியும், இந்த ஞானங் கூடாமல் முற்பட்ட வழிகளிலே நின்றவர்கள் பதமுத்தி பெறும்படியுமாம். இவற்றைச் சுருங்கக்கொண்டு சரியையுங் கிரியையும் ஒன்றாக்கிச் சிவதன்மமென்றும், யோகத்தைச் சிவயோகமென்றும, ஞானத்தைச் சிவஞானமென்றும், நான்கு பாதங்களை மூன்றாக்கி இவற்றிலே சாதிக்கும் உபாயங்களையும் பேறுகளையும் மேல் அருளிச்செய்கின்றார் :

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய—வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணா அரன்.

(உரை) சிவனைக் கர்த்தாவாகக் கொள்ளாத சமயங்களிலே நின்று சாதித்துக் கெடாத குற்றமற்ற சிவனை நோக்கின சைவசித்தாந்தத்திலே, சிவதன்மத்தாலேயாதல், சிவயோகத்தாலே யாதல், சிவஞானத்தாலே யாதல், சிவனைக் கூடும்படி சாதிக்குமவர், தங்களாலே செய்யப்பட்டதாகக் கருதாதே,கர்த்தாவின் ஏவலென்றே யறிந்து, தம்முடைய சுதந்திரத்தை விட்டு, அவன் கைப்பட்டு வரவல்லார்

ஆவர் ; அவர்களே அந்தக் கர்த்தாவின்மேலே மிக்க அன்பை வைக்கில், அவரிடங்களிலே சென்று தலைப்படா நிற்பன் ; மாணவகனே! பிரம விஷ்ணுக்கள் இன்றளவுங் காணப்படாத சிவன். கரு

இத் திருவெண்பா மூன்று வகைக்குங் காட்டும். இந்த மூன்று வகையிலு முற்பட்ட சிவதன்மத்தை யறிந்து வழிபடுவார் வழிபடும் படியே நின்ற மாணவகனை நோக்கி, சிவதன்மத்தை மெல்வினை யென்றும், வல்வினை யென்றும் இரண்டாக்கி இந்த முறைமையை அருளிச்செய்கின்றார் :

மெல்வினையே யென்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டும்—சொல்விற்
சிவதன்மம் ஆமவற்றிற் சென்றதிலே செல்வாய்
பவகன்மம் நீங்கும் படி.

(உரை) மெல்வினை யென்றும் உலகத்தாராலே செய்தற்கரிய வல்வினை யென்றுஞ் சிவனை வழிபடத்தக்க இந்த இரண்டு வகையுஞ் சொல்லுமிடத்து, சிவதன்மமென்றே சொல்லப்படு மாதலால், இவையிரண்டினுள், உன்னுடைய கருத்துக்குப் பொருந்தின தொன்றை வேறொரு பலன்களையுங் கருதாதே செய்வாயாக.—மாணவகனே! உன்னுடைய பிறப்புக்கு ஏதுவாகிய வினை விட்டு நீங்கும்படி. பலன்களைக் கருதிப் பதங்களை யடையாமல், சாயுச்சியமே பெறுகைப் பொருட்டாக உண்மையான சிவஞானத்தைப் பெறவேண்டும். கசு

இந்த இரண்டு வகையில் முற்பட்ட மெல்வினையின் முறைமையை அருளிச்செய்கின்றார் :

ஆதியை அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் செய்வனவும்—வேதியனே
நல்வினையாம் என்றே நமக்குமெளி தானவற்றை
மெல்வினையே யென்றதுநாம் வேறு.

(உரை) வேதியனே ஆகமங்களில் அருளிச்செய்த படியே, சிவனை உள்ளபடி அர்ச்சித்து வழிபடத்தக்க கிரியா விதிக்குப் பக்குவனும்படி, இவனுடைய அவயவங்களினாலே அந்தந்த அவசரங்களிலே செய்யத்தக்க திருவலகு, திருமெழுக்கு, திருவிளக்கு, திருநந்தவனம், திருப்பள்ளித் தாமம், திருமஞ்சனம், திருமாலை, கூத்து, பாட்டு

முதலாயுள்ள தொழில்களும், திருவேடத்தாரை வழிபடுகையும், சிவபத்தருக்கு வேண்டுவன செய்கையும், திருமந்திரம் ஜபிக்கையுமாக இப்படியே செய்யப்பட்ட குற்றமற்ற வழிபாடான சரியையும், இந்தச் சரியையின் முதிர்ச்சியாலே திருவுள்ளத் தடைத்துச் சிவனை அர்ச்சித்து வழிபடுகிற கிரியா விதியும், நல்ல செயற்பா டென்று நமக்கெளிதாகச் செய்யலாகையாலே, இவை இரண்டையும் மெல்வினையென்று திவ்வியாகமங்களிலே சொல்லப்பட்ட படியாலே, நாமும் இதனை உனக்குச் சொன்னோம்.

சரியை கிரியைகளிலே நின்று வழிபடுகின்றவளவில், கொலை களவு கள் காமம் பொய் என்கிற ஐந்தையும் விட்டு நிற்கையாலும், மனவாக்குக் காயங்களால் நினைப்பன, சொல்வன, செய்வன வெல்லாந் தெய்வ கிருத்தியத்தினாலே யாகையாலும், அசுத்தத்திலே நின்றும் நீங்கிச் சுத்தனாய் நிற்கையாலும், சர்வான்மாக்களையுந் தன்னைப் போலே காண்கையாலும், வேதாகமங்களின் முறைமைகளிலே வழுவாமல் நிற்கையாலும் ஆசாரியனாலே வேதியனே யென்று அழைக்கப்பட்டது. கஎ

இந்தச் சரியையினையுங் கிரியையினையும் மெல்வினையாக்கி இந்த நிலைகளின் முதிர்ச்சியாலே பின்புண்டான ஜநநத்திலே சிவனளவிலே மிகுந்த சிநேகமாகி இவனுக்கு விளைந்த வல்வினையிருக்கும் முறையை அருளிச்செய்கின்றார் :

வரங்கள் தரும்செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்றுகறி யாக்க—இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று.

(உரை) நல்ல வரங்களைத் தருகின்ற வயிரவ வேடங்கொண்டெழுந்தருளிய கடவுளுக்குக் கறியமுது செய்யும்பொருட்டு முன்னே இரக்கமின்றித் தமது திருக்கரங்களாலே பிள்ளையைக் கொலைசெய்த சிறுத்தொண்ட நாயனாரது கொடுவினை போன்றவற்றை நாம் வல்வினை யென்று கூறினோம். கஅ

பாதக மென்[illegible]யென்றும் பாராதே
தா[illegible]ளிரண்டும்—சேதிப்பக்

கண்டேசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டேசர் தன்செயலால் தான்.

(உரை) பாவம் பழிகளை நோக்காமல், பிதாவும் பிராமணனுமாகி யோனது பாதங்களை (திருமஞ்சனப் பாற்குடத்தை உடைத்தமைக் காகச்) சேதித்த சண்டேசுர நாயனாரது வல்வினையை நோக்கி, சிவ பிரான் தாமாந் தன்மையை அருளினார் இதனைக் காண். ௧௯

செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை
ஐய இதுவமுது செய்கென்று—பையவிருந்(து)
ஊட்டி யறுத்தவர்க்கே ஊட்டி அறுத்தவரை
நாட்டியுரை செய்வதின்றே நாம்.

(உரை) ஐய! கழனியிலே சிந்திய செந்நெலரிசி செங்கீரை மாவடு என்னுங் கட்டளைப் பொருளாகிய இதனைத் திருவமுது செய்தருளுகவென்று மெல்லவிருந்து கண்டத்தோடு தண்டினை அரிந்து, அச்சிவபிரானுக்கு நிவேதித்துப் பிறவிவே ரரிதலாகிய வல்வினை செய்த அரிவாட்டாய நாயனாரை இவ்வியல்பினரென நாட்டி நாம் புகழ்வது முடியுமோ.

இந்த மூன்று திருவெண்பாவாலும், சாத்திரங்களிற் சொன்ன வழியன்றியே அளவற்ற அன்பின் பெருமையாலே, உலகத்தியற்கை விட்டு யாவராலுஞ் செய்யவொண்ணாத செயல்களைச் செய்தமை யாலும், இவற்றை ஒரு பிரமாண நூல்களாலுஞ் சொல்ல அரிதாகை யாலும், இவை வல்வினைகளென்று சொல்லப்பட்டன. ௨௦

இப்படிக் கொடிதான வல்வினைகளைச் செய்யுமவர்களும் முத்தியைப் பெறுவார்களோ என்று ஐயப்பட்ட மாணவகனை நோக்கி அருளிச் செய்கின்றார் :

செய்யும் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டார்—ஐயா
உழவும் தநுசும் ஒருமுகமே யானல்
இழவுண்டோ சொல்லாய் இது.

(உரை) செய்யும்...பரங்கெட்டார் - இப்படிக் கொடிதான வல்வினைகளைச் செய்யும்போதே இந்தக் கொடிய செய்திகளால் அகிதம் வாராமற் சிவனை நோக்கியே நின்று சிவனன்பில் வைத்த அன்பின்

பெருமையாலே இந்தச் செயல்களையும் முறைமையான செயலென்றே கொண்டு தம்மையும் மெள்ளச் சிவன் கையிலே கொடுத்துப் பரங்கெட்டு விடுகையாலே, அவர்கள் கர்த்தாவின் கைப்பட்டு முத்தியே பெறு நிற்பர்கள்,—ஐயா...இது - ஐயனே! ஒருவனுக்கு உழவோரிடத்திலுந் தநுசோரிடத்திலுமானல் ஒன்றுக்கொன்று உதவி கூடாது, அவை யிரண்டும் ஓரிடத்திலே யானல் இவன் சூரனாய் விடுகை சந்தேகமில்லை; அதுபோலச் செய்கின்ற செயல்களில் அகிதம் வாராமற் சிவனை நோக்கியே செய்தும் இந்தச் செயல்களுஞ் சிவன் செயலென்றே கொண்டு தம்மையும் அவன் கையிலே கொடுத்துப் பரங்கெட்டு விடுகையாலே இவன் பெறுகின்ற முத்திக்கும் இழவுண்டாகுமோ இதனை விசாரித்துச் சொல்லாய். ௨௧

இனிச் சரியை கிரியைகளிலே நின்று சாதித்தவர்க்கும் பிற்பட்ட ஜநநத்தில் இப்படி முதிர்ந்த வல்வினை கூடாமல் யோகத்துக்கு அதிகாரியானவனுக்கு யோகம் வெகு விதமாகையினலே இதனைச் சுருங்கக்கொண்டு ஆதார யோகமென்றும் நிராதார யோகமென்றும் உத்தமமான யோகங்களை எடுத்தருளிச் செய்கின்றார் :

ஆதார யோக நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே—ஆதாரத்(து)
ஆக்கும் பொருளாலே ஆக்கும் பொருளாமொன்(று)
ஆக்காப் பொருளேயொன் றாம்.

(உரை) ஆதார...இரண்டே - ஆதார யோகமென்றும் நிராதார யோகமென்றும் எல்லாவற்றிற்கு மேலான இடமாகிய திருவடியிலே பக்குவப்பட்ட ஆன்மாக்கள் பொருந்தும்படி சாதித்துக் கூட்டுகைக்கு வேதாகமங்களிலே விதிக்கப்பட்டன இரண்டு பிரகாரமாயிருக்கும்.—ஆதாரத்து ஆக்கும் பொருளாலே ஆக்கும் பொருள் ஒன்றாம் - ஆதாரங்களிலே ஒவ்வொரு திவ்யரூபங்களை ஆசிரியனிடத்திலே பெற்று அந்தத் தானங்களிலே தியானித்திருக்கத் தக்க ஆதார யோகம் ஒன்றாம்.—ஆக்காப் பொருள் ஒன்றேயாம் - இந்த ஆதார யோகம் கைவந்தவாறே ஆதாரங்களில் பார்த்திருக்கும்படி கற்பித்துக் கொண்டு நிற்பது போலாது சைதன்னிய சொரூபத்தைப் பாராதே பார்த்து நிற்கின்ற நிராதார யோகம் ஒன்றாம். ௨௨

இந்தத் திருவெண்பா ஆதார யோகத்துக்கும் நிராதார யோகத்துக்கும் காட்டாகையால் இவற்றில் முன்னே சொல்லப்பட்ட ஆதார யோகத்தை மேல் விளங்க அருளிச் செய்கின்றார் :

ஆக்கி ஒருபொருளை ஆதாரத் தப்பொருளை
நோக்கி அணுவில் அணுநெகிழப்—பார்க்கில்
இவனுகை தானொழிந்திட் டேகமாம் ஏகத்(து)
அவனுகை ஆதார மாம்.

(உரை) ஆதாரத்து ஒரு பொருளை ஆக்கி - தேகத்திலே கற்பிக்கப்பட்ட ஆறு தாரங்களிலே ஆசாரியன் அருளிச்செய்ததொரு திவ்விய ரூபத்தை இதற்குப் பொருந்தினதோர் ஆதாரத்திலே தன்னுடைய மனமானது விஷயங்களிற் பற்றாமல் இதிலே பற்றும்படி கற்பித்துக்கொண்டு,—அப்பொருளை நோக்கி - அப்படிக் கற்பித்துக் கொண்ட உருவங் கைவரும்படி நெடுநாள் தியானித்து,—அணுவில் அணு நெகிழப் பார்க்கில் இவனுகைதான் ஒழிந்திட்டு ஏகமாம் - அந்தத் தியானங் கைவந்தவாறே அந்த ஆதாரங்களை விட்டுத் தன்னிலே அந்தப் பொருளைத் தியானிக்கின், அந்தத் தியானத்தின் முறுகுதலாலே தியானிக்கின்றோ மென்கிற நினைவு கெட்டு, அந்தப் பொருளொன்றுமேயாம்,—ஏகத்தவனுகை ஆதாரமாம் - இப்படித் தியானிப்பானுந் தியானிக்கப்படும் பொருளு மன்றியே தன்னைமறந் தந்தத் திவ்விய ரூபந் தானுக நிற்பதுதானே ஆதார யோகமாம். ௨௫

இனி இந்த ஆதார யோகத்தை நுண்ணிதாகச் சாதிக்கு முறைமை அருளிச்செய்கின்றார் :

கொண்ட தொருபொருளைக் கோடபடக் கூறுசெயிற்
கொண்டவனும் அப்பரிசே கூறுபடும்—கொண்ட
இருபொருளும் அன்றியே இன்னதிது வென்ன
ஒருபொருளே யாயிருக்கும் உற்று.

(உரை) கொண்டது...கூறுபடும் - தான் கைவரத் தியானித்ததொரு பொருளை நுண்ணிதாக நுணுக்கிப் பரமாணுவினும் நுண்ணிதாகத் தியானிக்கின் இப்படித் தியானிக்கின்றவனுந் தியானித்த பொருள்போலப் பரமாணுவினும் நுண்ணிதாக நிற்பன்.—கொண்ட இருபொருளும்...உற்று - இப்படி நிற்கவே தியானிப்பானுந் தியானிக்கப்படு பொருளும் அன்றியே ஒரு கற்பனையற அப்பொழுதே அந்த ஒப்பில்லாத பொருள் தானேயாயிருக்கும். ௨௬

இனி இந்த நுண்ணிதான தியானமுங் கரைய ஆதார யோகத்துக்கு முடிந்த யோகமுமாய் உபாய யோகமுமா யிருக்கின்ற மந்திர யோகத்தை அருளிச் செய்கின்றார் :

அஞ்செழுத்து மேஅம்மை அப்பர் தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறுகப் பெற்றறிந்து—அஞ்செழுத்தை
ஓதப்புக் குள்ள மதியுங் கெடிலுமைகோன்
கேதமற வந்தளிக்குங் கேள்.

(உரை) அஞ்செழுத்துமே...காட்டுதலால் - அகாரம் உகாரம் மகாரம் விந்து நாதம் என்கின்ற பஞ்சாக்கரமான பிரணவத்துக்குப் பிரமா விஷ்ணு உருத்திரர் மகேசுரர் சதாசிவர் இவர்கள் ஐவரும் அதிதேவதைகளுமாய், மந்திரமூர்த்திகளுமாய், ஓங்காரமாயே நின்று நடத்துகின்ற இந்த ஐந்தெழுத்தே சத்தியையுடைய சிவன் திருமேனி கொண்டு நடத்துகின்ற முறைமையைக் காட்டுதலால்,—அஞ்செழுத்தை ஆறுகப் பெற்று அறிந்து - இந்த ஐந்தெழுத்தும் மூலாதாரத்திலே அகாரமும் பிரமாவும், நாபிகமலத்திலே உகாரமும் விஷ்ணுவும், இருதய கமலத்திலே மகாரமும் உருத்திரனும், கண்டத்திலே விந்துவும் மகேசுவரனும், புருவமத்தியிலே நாதமும் சதாசிவமும் இப்படிச் சுழுமுனை வழியாக நிற்கின்ற முறைமையைக் குருவுபதேசத்தாலே பெற்று, இந்த ஐந்தெழுத்தையும் மூலாதாரத்திலே, பிரமரந்திரத்திலே செல்ல உச்சரித்தலால், இந்தப் பிரணவ சொரூபமுங் கரைந்து விக்கிரகங்களும் ஒரு நீர்மையாய் உனக்கு நாதரூபமாய் நாதாந்தத்திலே அருளைப் பெறுவையென்று ஆசாரியன் அருளிச்செய்ய அறிந்து,—அஞ்செழுத்தை ஓதப்புக்கு உள்ளமதியும் கெடில்- இந்த ஓங்காரமான ஐந்தெழுத்தும் உச்சாரணபேதத்திலே, நாற்பத்தொன்பதா மெழுத்தும் பதினுலா மெழுத்தும் ஆறுமெழுத்தும் இவை கூடின விடத்திலே விந்துவும் நாதமுமாக இந்த முறைமையிலே ஐந்தெழுத்தாமென்றும் வேதாகமங்களிலே விதிக்கையால், இந்த ஐந்தெழுத்தையும் உன் தத்துவமான உச்சரிப்புக்கு விந்து நாத முடிந்த விடத்திலே கிஞ்சிஞ்ஞமான ஆன்மபோதமுங் கெடில்,- உமைகோன் கேதம் அற வந்து அளிக்கும் கேள் - அப்பொழுதே

187093

சத்திக்குக் கர்த்தாவாகிய சிவன் குற்றமறத் தோன்றி உண்மையான சொரூபத்திலே கூடி இரக்ஷிப்பன். (மாணாக்கனே!) கேட்பாயாக.

இந்த ஆதாரயோகத்தைத் தூலசூக்கும பரமென மூன்றுபடியாகக் கரைத்தவிது, பின்பு நிராதார யோகத்துக்குப் பிராப்தனாம்படியென அறிக. ௨௫

இந்த ஆதாரயோகங் கைவரச் சாதித்தவர்களுக்கு மேல் நிராதாரயோக மிருக்கும்படி அருளிச் செய்கின்றார்:

ஆக்கப் படாத பொருளாய் அனைத்தினிலும்
தாக்கித்தான் ஒன்றோடும் தாக்காதே—நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம்.

(உரை) ஆன்ம போதத்தாற் கற்பிக்கக்கூடாத அர்த்தமாய், எல்லாப் பொருள்களிலுந் தான் கூடி நிற்கும்போதே அவை ஒன்றோடுந் தான் தோயாமல், ஆன்மாவுக்கு முத்திக்கு விரோதமாய் நீக்கத்தக்க பொருள்களையுந்தானே அறிந்து நீக்கி, அநாதியே இப்படி நீங்கப் படாத அந்த ஞானசொரூபத்துடனே தன்னுடைய போதம் ஒழிந்து இதனைக் கூடித்தானும் அந்த ஞானசொரூபமாய்ப் பற்றற நிற்பது நிராதாரயோகமாம். ௨௬

இந்த ஞானத்திலே இப்படி இரண்டற நிற்கில் சிவனை உள்ளபடியே காணலாமென்று அருளிச் செய்கின்றார்:

காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக்—காண்கின்றார்
காண்பானுங் காணப் படும்பொருளும் அன்றியே
காண்கையினாற் கண்டனரே காண்.

(உரை) காண்கின்றது...கண்ணுதலை-எல்லாவற்றையும் அறிந்து அறிவித்து நிற்கிறதாகிய ஞானத்தை அது கண்ணாகக் காண்கின்ற சிவயோகிகளே சிவனை இரண்டறக் காண்கின்ற கலியாணர்கள்,—காண்கின்றார்...காண்-மாணவகனே! இப்படிக் காண்கின்றவர்கள் தன்னாலே காணப்படாததாகவும் காணப்பட்ட பொருள் தனக்கு வேறாகவுங் காணாமல் அந்த ஞானமாகவே நின்று காண்கையாலே, இந்த

ஞானமே சொரூபமாகவுடைய சிவனை அப்பொழுதே பெற்று வேறற்றிருப்பார்கள் இதனைக் காண்பாயாக. ௨௭

இனி இந்த நிராதாரயோகம் நிலை பெறும்படி, இதற்குபாயமான மௌன யோகத்தை அருளிச் செய்கின்றார்:

பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான்—பேசாதே
எண்ணொன்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால்
உண்ணின்றும் போகான் உளன்.

(உரை) பேசாமை...பெருமான் - வாக்குமனங்காயங்கள் மூன்றினுள் மட்டுப்படாதது வாக்காகையாலும், மாற்றமுண்டேல் வஞ்சமுடென்கையாலும், பேசாமையாகின்ற பரமோபாயத்தை ஆசாரியன் பக்கலிலே பெற்று, அந்தப் பேசாமை தன்னுடன் வாசனையிற்போகாமல், வாக்குமனங் கிட்டாத சிவனைத் தங்களிடத்திலே ஞான திருஷ்டியாலே கண்டு கூடி, செயலற்றிருக்கின்ற சிவயோகிகளை, பின்பு ஒரு சரீரங்கூடி வாக்குண்டாகாதபடி ஜகத்தை வேரறுத்து விடாநிற்பன்சிவன்,—பேசாதே...உளன்-இப்படிஉரையிறந்துசிவனுடனே இரண்டற்றிருக்கின்ற சிவயோகிகளிடத்துப் பரமேசுவரன் எவ்விடத்தினும் வியாத்தமாயினும், அவ்விடங்களிலே மறைந்தே நின்று, இவர்களிடத்தே பிரகாசித்து இவர்க்கே உடனா யிருப்பன்.

பேசாமையாகின்ற பரமோபாயத்தை ஆசாரியன் பக்கலிலே பெற்றபடி எங்ஙனமெனின், தேக முதலாயுள்ளவை உனக்கு வேறென்றும், இவற்றுடன் கூடினால் பிறப்புக்குக் காரணமான கன்மமுண்டாமென்றும், உனக்கு ஞானமே வடிவென்றும், தீக்கையிலே நாம் இசைவிக்க நீயும் இசைந்தாயென்றும், அல்லதூஉம் சரீரம் அர்த்தம் பிராணன் இவை தத்தம் பண்ணினாயே யென்றும், நமக்குத் தத்தம் பண்ணின பொருளை நீ விரும்பக்கடவை யல்லையே யென்றும், ஆசாரியன் அருளிச்செய்ய, இவனும் நமக்கில்லாத பொருள்களை விரும்பக்கடவோ மல்லோமென்று அறுதியிட்டதேயாம். ௨௮

நிராதார யோகத்துக்குத் தூலசூக்கும பரமாக மூன்று திருவெண்பா அருளிச் செய்து, மேல் இந்தப் பரமாகிய சிவனை ஆன்ம

போதம் இறந்தாலொழிந்து கூடவொண்ணாதென்னு முறைமையைப் பல செய்யுட்களாலும் விளங்க அருளிச் செய்கின்றார் :

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற இடஞ்சிவமாம்—நாட்டுற்று
நாடும் பொருளனைத்தும் நாநா விதமாகத்
தேடுமிடம் அன்று சிவம்.

(உரை) ஒட்டற்று நின்ற உணர்வு முட்டிப்பதி தேட்டற்று நின்ற இடம் சிவமாம் - ஓர் அசைவின்றியே நின்ற பரமஞானத்தை அது கண்ணாகக் கண்டு கூடின ஆன்மா, அந்த ஞானமேயாய்த் தானும் அசைவின்றியே நிற்கில், அந்த ஞானத்தில் நிலையாகத் தன்னுடைய ஆன்மபோதம் ஒழிந்து அந்த ஞானமாயே நின்ற இடந்தன்னிலே, சிவமே பிரகாசித்து அவனையும் ஒரு நீர்மையாக்கிக் கொள்ளா நிற்கும்,—நாட்டுற்று நாடும் பொருள் நாநாவிதமாகத் தேடும் இடம் அனைத்தும் சிவம் அன்று - இப்படி யொழிந்து, சுட்டியறியத்தக்க ஆன்மபோதத்தாலே வெகு விதமாக ஆராய்ந்தறியத்தக்க இடம், பிரபஞ்ச வியாபாரமாகையால், அவ்விடஞ் சிவரூபமாகாது. ௨௯

இன்னமும் இதனை விளங்க அறியும் உபாயம் அருளிச் செய்கின்றார் :

பற்றி னுட்பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற—பற்றதனைப்
பற்றுவிடில் அந்நிலையே தானே பரமாகும்
மற்றமிது சொன்னேன் மதி.

(உரை) ஆன்மாவுக்குக் கன்ம பலத்தை விளைவிக்கின்றவைகளாகிய தனுகரண புவன போகங்களினுள்ளே, பற்றிக்கொண்டு நிற்கின்ற இச்சா ஞானக்கிரியைகளை ஒழிப்பதான, சிவ போகத்தை விளக்கத்தக்க சிவஞானத்தை அது கண்ணாகக் கண்டு கூடி, அதனைக் கூடினேமென்று பிரியப்பட்டிருக்கின்ற கருத்தையுங் கைவிடின், அந்த நிலைதன்னிலே அந்த ஞானத்துக்கு மேலான சிவந் தானே பிரகாசியா நிற்கும். அறுதியாகச் சொன்னேன் இதனைப் புத்தி பண்ணிக்கொள்வாய். ௩௰

சென்னை சர்வகலாசாலை
தமிழ் லெக்ஸிகன் ஆசிரியர்
எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள்
வெளியிட்ட நூல்கள்

		ரூ.	அ.
1.	தினகர வெண்பா	0	6
2.	கம்பராமாயணம்: உயுத்த காண்டம் (முதன் மூன்று படலங்கள்)	0	6
3.	களவியற் காரிகை (அகப்பொருள் இலக்கணம்)	3	0
4.	நவசக்தி மாலை :		
	க. திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா	0	4
	உ. நெல்விடு தூது	0	6
	௩. பூகோள விலாசம்	0	8
	ச. இராமலிங்கேசர் பேரிற் பணவிடு தூது	0	4
5.	தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி :		
	க. நாமதீப நிகண்டு (சொல்லகராதியுடன்)	2	0
	உ. அரும்பொருள் விளக்க நிகண்டு (சொல்லகராதியுடன்)	1	4
	௩. பொதிகை நிகண்டு	1	4
6.	ஆராய்ச்சியுரைத் தொகுதி : (ஆசிரியர் எழுதிய கட்டுரைகளின் தொகுதி) முதற்பாகம்	1	4

THE B. N. PRESS, MADRAS.

உயர்ந்த முறையில் இப்பிரசங்கங்கள் நடக்கின்றன. திரளான மக்கள் ஆடவரும் பெண்டிருமாக வந்து கேட்டின்புறுகின்றனர். வாரந்தோறும் சனிக்கிழமை மாலை 6 மணிமுதல் 8 மணிவரை இப்பிரசங்கத்தைத் தேவாரபாராயணத்துடன் (134, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர் என்ற) திரு - நாகி செட்டியாரவர்கள் மாளிகையில் நடத்திவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 10-3-34-ல் திரு - கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் பிரபுலிங்க லீலையில் முத்தாயியம்மை கதியையும், 17-3-34-ல் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, அவர்கள் எம். ஏ., பி. எல்., பெரியபுராணத்தில் மூர்த்திநாயனார் புராணத்தையும் படனஞ் செய்வார்கள். மற்றவை பின்னர் அறிவிக்கப்படும்.

தஞ்சை சைவசித்தாந்த சபையின் ஆண்டு விழா

நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சபையின் நான்காம் ஆண்டுவிழா மிகச் சிறப்பாக 4-2-34-ல் திரு. கையாறு டிஸ்டிரிக்ட் முன்சிப் திரு. வ. க. சண்முகம் பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்கள் ஊர்வலமாக அழைக்கப்பெற்று வாழ்த்துப் பத்திரம் முதலியன வழங்கப் பெற்றனர். கடவுள் வணக்கம், அறிக்கை படித்தல் முதலியன நிகழ்ந்த பின்னர் இவ்வூர் சைவசித்தாந்த இளைஞர் சங்க உறுப்பினர் திரு. சிக்கப்பெருமாள் வேணுச்சாமி என்பவர்களால் ஆலய வழிபாடு பற்றிய உரையாடலும், சுப்பிரமணியன் நாகரத்தினம் என்ற இளைஞர்களால் விபூதி பற்றிய உரையாடலும் நிகழ்ந்தன. திருவாளர்கள் விருத்தாசலம் பெரியசாமி பிள்ளை, லால்குடி சரவண முதலியார், தஞ்சை சிவகுருநாத பிள்ளை ஆகிய மூன்று பேறிஞர்கள் முறையே திருமூலர், நீலகண்டர் தெருளும் ஆலமுண்டான் அருளும், எவ்வகைச் சமயமும் ஏற்கும் எம்சைவம் என்பன பற்றி அமிழ்தினுமினிய செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இச்சபை வாரந்தோறும் திரு-த. பா. சிவகுருநாத பிள்ளையவர்களைக் கொண்டு நடத்திவரும் சைவப் பிரசங்கங்கள் நூற்றுக் கணக்கான ஆண் பெண் மக்கட்குப் பெரிதும் பயன்படுவதைத் தலைவரவர்கள் புகழ்ந்து பாராட்டி, மேன்மேலும் இச்சபை சைவத் தொண்டு புரிய இறைவனை வழுத்தித் தகுந்த முடிபுரை கூறினார்கள். இரவு 9 மணிக்குக் கடவுள் வாழ்த்தோடு சபைகலைந்தது.

தஞ்சை சைவசித்தாந்த இளைஞர் சங்க 3-ம் ஆண்டு விழா

நமது சமாஜத்தின் இணைப்புப் பெற்ற இச்சங்கம் இவ்விழாவை 4-3-34-ல் திரு. ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தி முடித்தது. திருவாளர்கள் பொன்னுசாமி முதலியார், நாராயணாச்சாரியார், கனக சபாபதி பண்டிதர், சிதம்பர சுவாமிகள், சிவகுருநாதபிள்ளை ஆகிய ஐந்து பேறிஞர்கள் முறையே சுந்தரர் தேவாரம், நஞ்சமயப் பெருமையும் நமது கடமையும், சிவத்தின் தன்மையே சைவத்தின் உண்மை, விபூதியின் மகிமை, ஏன் பிறந்தேன் என்பன பற்றிச் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். இளைஞர் உரையாடலும் நடைபெற்றது. இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

பிரிவாற்றுமை

நமது சமாஜ ஆயுள் அங்கத்தினருள் ஒருவராகிய சைவத் திருவாளர் V. சிவப்பிரகாச முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையி லுள்ள தமது இல்லத்தில் 2-2-34-ல் சிவபதமடைந்தார் கள். நமது சமாஜத்தின் பிரிவாற்றுமையை அவர் உற வினருக்கு இதன் மூலம் தெரிவிக்கிறோம்.-காரியதரிசி.

திருக்குற்றால மலைக்கோவையின் ஆசிரியர்

மேலகரம் திரிகூடராசப்ப கவிராயர் 14 பிரபந்தங்க ளியற்றிய தாகத் திருக்குற்றாலத் தலபுராணத்தில் எழுதப்பட்டுள்ளது. அவற் றுள் திருக்குற்றாலக் கோவையும் ஒன்றெனச் சொல்லப்படுகிறது. எனவே, திருக்குற்றால மலைக்கோவை மேற்கூறிய ஆசிரியர் பாடிய கோவை யென்று ஊகிக்க இடமிருக்கிறது.

வ. பெ. சங்கர வேலாயுதம்பிள்ளை,
வள்ளியூர், நான்கு நேரி தாலுக்கா.

திருமயிலாப்பூர் திருவிழாவில் சமய போதனை

21-3-34 முதல் 31-3-34 வரை நடைபெற விருக்கும் திரு மயிலாப்பூர்த் திருவிழாவில் வழக்கம்போல் சமாஜத்தினர் எளிய மக் கட்குச் சமயபோதனை செய்வார்கள்.

சங்கப் புலவர் அகராதி :—பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பதி னெண்கீழ்க்கணக்கு எனப்படும் சங்கநூல்களிற் காணப்படும் ஆசிரியர் கள் பெயர்களெல்லாம் அகர வரிசையில் தொகுக்கப்பட்ட இந்நூல், ஒவ்வொருபுலவரும் இயற்றிய பாடல்கள் இன்ன இன்ன என்று குறிப் போடு பல பேரறிஞர்கள் உதவியைக் கொண்டு சமாஜப் பதிப்பாக வெளிவந்துள்ளது. தனிப்பிரதி விலை அணு 2½. தபாற்கூலி அணு 1. எட்டுப்பிரதிகள் விலை ரூபா ஒன்று. தபாற் கூலி வேறு. ஒவ்வொரு தமிழ் மாணவரிடமும் இவ்வகராதி இருத்தற் குரியது.

சிவஞான சித்தியார் சுபக்கம் :—மூலமும் சிவஞான சுவாமிகள் உரையும் - சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு - தனிப் பிரதி விலை அணு 12. ரிஜிஸ்தர் தபாற் கூலி அணு 5. எட்டுப் பிரதிகள் விலை ரூ. 5. தபாற்கூலி வேறு.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.